பனிமலர்

அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி / டிசம்பர் 2024

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams
North America
SINCE 1988

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
கேரொலைனா தமிழ்ச்சங்கமும் (RALEIGH, NC)
இணைந்து நடத்தும்
38 ஆவது
பேரவைத் தமிழ் விழா 2025
ஜூலை 3, 4 & 5 - 2025
வியாழன், வெள்ளி & சனிக்கிழமை
FeTNA 38TH TAMIL CONVENTION 2025
RALEIGH, NC | July 3, 4 & 5-2025
"தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம்"
அனைவரையும் வருக... வருக... என அன்புடன் வரவேற்கிறோம்!
பேரவை விழா ஒருங்கிணைப்பாளர்கள்
பாரதி முருகேசன் & மீனா இளஞ்செயன்
FiTEN ஒருங்கிணைப்பாளர்
முனைவர் பாரதி பாண்டி
www.fetna.org

அருவி

உள்ளே...

பேரவைத் தலைவர் மடல்	4
பேரவைச் செயலாளர் மடல்	6
ஆசிரியர் மடல்	7
செயற்குழு 2024-2026	8
ஆசிரியர் குழு	9
37-ஆவது பேரவைத் தமிழ் விழா 2024	10
அமெரிக்க பள்ளிகளில் இந்திய மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்	15
மாவீரர் நாள்	16
குறை ஒன்றும் இல்லை!	17
பனியின் மடியில் பாரம்பரியத்தின் சுவை	19
வாழ்த்தலாம் வாரீர்	20
தமிழ்ச்சங்க நிகழ்வுகள்	24
தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம்	31
கனவு நினைவாக வேண்டும்!	32
சிறார் பகுதி	34
கவிச்சாரல்	36
கனவு கண்டான் பாரதி	40
உள நலம்	43
தமிழ்ச்சங்க நிகழ்வுகள்	46

தலைவர் மடல்

தமிழுறவுகள் அனைவருக்கும் வணக்கம். நன்றி நவிலல் நாள் கொண்டாட்ட விடுப்புகளை இனிதே கொண்டிருந்திருப்பீர்களென்றும், எதிர்வரும் விடுமுறைக்காலமும் இனிதே அமைய வேண்டுமென்றும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ள விழைகின்றேன்.

புதிய செயற்குழு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகான கடந்த ஐந்து மாதங்களாய், பேரவையின் செயற்பாட்டிலும் தன்னார்வலர்களாகிய உங்கள் பங்களிப்பிலும் மனம் நெகிழ்ந்து திளைத்து இருக்கின்றேனெனச் சொன்னால் அது மிகையாகாது. பேரவை வரலாற்றில் முதன்முறையாக ஒட்டுமொத்த இடங்களுக்கும் தேர்தல் இடம் பெற்று, நெறிமுறைகளுக்கொப்பப் பொறுப்பாளர்களைத் தெரிவு செய்துள்ளீர்கள். அதற்கொப்ப என்னவெல்லாம் ஆக்கப்பூர்வமாய்ச் செய்ய வேண்டுமெனத் தன்னார்வலர்கள் புதுப்புது யோசனைகளைத் தொடர்ந்து சொல்லிவருவது கண்டும் மனமார்ந்து மகிழ்கின்றேன்.

அமெரிக்கா வருகைபுரிந்திருந்த இந்தியத் தலைமை அமைச்சர், தமிழ்நாட்டு முதலமைச்சர், இதர அரசு அலுவலர்கள், அமைச்சர்களுக்கெல்லாம் வரவேற்பளித்து, நல்லுறவு போற்றுவதிலும் தமிழுக்கும் தமிழர்களுக்கும் மேன்மை கிட்டிட எவ்வாறெல்லாம் தொடர்ந்து செயற்படலாமென்பதிலும் பேரவை அக்கறை கொண்டு செயற்பட்டு வருகின்றது.

பேரவையின் செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மையை எவ்வளவுக்கெவ்வளவு கட்டமைக்க முடியுமோ அவ்வளவும் செய்திட வேண்டுமென்பதிலும் செயற்குழுவானது நாட்டம் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. உங்கள் சார்பாக, செயற்குழுவுக்கு நன்றிகூறக் கடப்பாடு உடையவனாகின்றேன். அதன் ஒருபகுதியாக, செயற்குழு, பொதுக்குழுக் கூட்ட அறிக்கைகள் உடனுக்குடனே பொதுக்குழுவுக்கு வந்து சேரும் நெறிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, கடைபிடிக்கப்பட்டும் வருகின்றனெயென்பதைத் தெரிவித்துக் கொள்வதில் அகமகிழ்கின்றேன்.

மேன்மைக்கான வித்து மாற்றங்கள். ஆனால் அந்த மாற்றங்கள் ஆக்கப்பூர்வமானதாய் இருந்திடல் வேண்டும். எனவேதான், ஒவ்வொரு மாற்றத்தை மேற்கொள்ளும் போதும், பொதுக்குழுவினரிடத்திலே பேசி, பலரதும் கருத்துகளும் அறியப்படுவது இன்றியமையாததாகக்

கருதப்படுகின்றது. அதன்பொருட்டுத்தான் நாங்களும் செயற்பட முனைகின்றோம். தமிழ்ச்சமூகமென்பது பண்டைய சமூகம், தொன்மைச்சமூகம். ஆகவே நம்முள் பலதரப்புகளும் இருப்பதில் வியப்பேதுமில்லை. ஆகவே எல்லோரையும் உள்ளடக்கிய சமூகமாக, அமைப்பாக, திரளாக நாம் ஒருங்கிணைந்து செயற்பட்டாக வேண்டும். அதுகுறித்தும் கவனத்திற்கொண்டுதான், முப்பதுக்கும் மேற்பட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன என்பதில் பெருமை கொள்கின்றோம். எல்லாச் சங்கங்களும் இடம் பெறவேண்டும்.

தொடர்ந்து, தேவைக்கொப்ப, புதுக்குழுக்கள் அமைப்பதும், இருக்கும் குழுக்களை மாற்றியமைப்பதும் தொடர்செயலாகச் செயற்பாட்டில் இருக்கும். ஆகவே, இன்றில்லாவிடினும் பிறிதொருநாளில் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அமைந்தே தீரும்.

தமிழுக்காய் தமிழருக்காய் இனவுரிமைகளுக்காய் விதைக்கப்பட்டோருக்கு, ஈகம் கொண்டோருக்கு, வீரவணக்கம் செலுத்தி நீத்தார் பெருமை போற்றுவது நம் பண்பாடு. இது இன்று நேற்றல்ல, புறநானூற்றுக் காலத்திய தமிழ்ப்பண்பாடு. அதன்நீட்சியான செயலாகவே, நாம் நம் மாவீரர்களுக்கான வீரவணக்க நாளை கடை பிடித்திருக்கின்றோம். அது நம் இன்றியமையாக் கடமை. அம்மாவீரர்களுக்கு வீரவணக்கம்.

வட கரொலைனா மாகாணத்தின் இராலே நகரில் அடுத்த ஆண்டு இடம் பெறவிருக்கும், பேரவை விழாவுக்கான தன்னார்வலர்கள் கூட்டத்தின் துவக்கவிழா நடந்து முடிந்திருக்கின்றது. ஏற்பாடுகள் செம்மையாக இடம் பெற்றிருந்தன. அதுவே கட்டியம் கூறுகின்றது, கேரொலைனா தமிழ்ச்சங்கத்தினர் இணைந்து நடத்தப் போகின்ற விழா எப்படியானதாக இருக்கப் போகின்றதென்பதனை. சீரும் சிறப்புமாகத் தமிழுணர்வோடு வந்திருந்தோர் அனைவரையும் கண்டபோது, ஊக்கம் கொண்டோம் நாம்.

பேரவை விழாப் பணிகளில் நீங்கள் எல்லாரும் பங்கு கொள்ள வேண்டும். ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக் கொள்ள வேண்டும். சமூகப்பிணைப்பினை வலுவாக்குதல் வேண்டும். உறவு போற்ற வேண்டும். வெற்றிவிழாப் பணிகளில் அனைவரும் பங்கு கொண்டு பயனுற வேண்டும். வருக வருக, வெற்றிவிழாப் பயணத்தில் இணைகவென அழைத்து உவகை கொள்கின்றோம். சென்னையில் இடம் பெறுகின்ற தமிழிசை விழா, மதுரையில் இடம் பெறுகின்ற பேரவையின் தொழில்முனைவோர் மாநாடு ஆகியனவற்றுக்கும் வாய்ப்புள்ளோர் வந்திட வேண்டுமென அழைக்கின்றேன்.

பேரவை விழாவின் ஒருங்கிணைப்பாளர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற மீனா இளஞ்செயன், பாரதி முருகேசன், தொழில் முனைவோர் மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் பாரதி பாண்டி, பேரவை விழாவின் இணை ஒருங்கிணைப்பாளர்கள் சாருலதா குருபரன், மீனாட்சிசுந்தரம் ராமநாதன் முதலானோருக்கும் வாழ்த்துகள் உரித்தாகுக.

அருவி இதழுக்குப் புதுக்குழு பொறுப்பேற்றிருக்கின்றது. இதழியல் பணிகளில் குழுவினர் எல்லாரும் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகின்றேன். இவ்விதழானது, ஆண்டின் கடைசிக் காலாண்டிதழ். அடுத்து வரும் புத்தாண்டு எல்லாருக்கும் இனிமையானதாக அமைய, புத்தாண்டு வாழ்த்துகள்! வாழிய நற்றமிழ்!!

Volunteers do not just do the work; they make it work.

விஜய் மணிவேல்,

தலைவர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.

பேரவைச் செயலாளர் மடல்

வணக்கம். நேற்று இரவு, டிசம்பர் 13, 2024, பேரவையின் காலாண்டுக் கூட்டத்தை முடித்த மனநிறைவுடன் இந்த மடலை எழுதத் துவங்குகின்றேன். கூட்டம் முடிந்தவுடன் சில அழைப்புகள். அவற்றுள் முதல் அழைப்பே இப்படித்தான் இருந்தது, “கபிலன், நான் 2005ஆம் ஆண்டிலிருந்து பேரவையின் பொதுக்குழுக் கூட்டங்களில் கலந்து வருகின்றேன். இன்றைய கூட்டம் போல அமைதியாகவும் ஒழுங்கோடும் எந்தவொரு கூட்டமும் இருந்ததில்லை. அந்த அளவுக்குக் கூட்டம் சிறப்பாக இருந்தது”. கூட்டத்தினைச் சிறப்பாக நடத்த உதவிய தொழில்நுட்பக்குழுவின் தலைவரான திரு. கருப்பையா, துணைத்தலைவர் செந்தில் கலியபெருமாள் ஆகியோருக்கு நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

பேரவைச் செயற்குழு, பொதுக்குழுக் கூட்ட அறிக்கைகளை உடனுக்குடனே பொதுக்குழுவுக்குப் பகிர்ந்து வருகின்றோம். ஆகவே, அந்தந்தத் தமிழ்ச்சங்கத்தார், அவரவர் பேராளர்களை அணுகி, பேரவை அலுவல் குறித்த எல்லாத் தகவலையும் அவ்வப்போது பெற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

இதுவரையிலும் 31 துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்களும் சிறப்பாக இயங்கி வருகின்றன. குழுக்களின் உறுப்பினர் பட்டியலும் இணையதளத்தில் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. இணையதளத்தைப் பயன்படுத்திப் பாருங்கள். ஏதேனும் கூடுதல் தகவல் இணையதளத்தில் இடம்பெற வேண்டுமென நினைத்தால், செயலாளர் மின்னஞ்சல் கணக்குக்கு அனுப்பி வைக்கப்படவும் வேண்டுகின்றேன்.

பேரவைப் பணிகள் நாளுக்கு நாள் பல்கிப் பெருகி வருகின்றன. நிறையத் தன்னார்வலர்களும் தமிழ்ச்சமூகத்துக்குப் பங்களித்திட வேண்டுமென வேட்கை கொள்வதையும் உணரமுடிகின்றது. ஒரு கூட்டுச்சமுதாயமாக, நாம் வட அமெரிக்காவிலே திகழ்ந்தாக வேண்டும். அரசியல், வணிக, கல்வி, விளையாட்டு, கலை, இலக்கியப் பண்பாட்டுத் தளத்திலே சிறக்க அது இன்றியமையதாகவொன்றாகும். அதன்பொருட்டு, பேரவைக்கும் மக்களுக்குமான தொடர்புப்பாலமாக இருக்க, தகவற்தொடர்புக்குழுவும் அமைக்கப்பட்டு உள்ளது. எனவே, pro@fetna.org எனும் மின்னஞ்சல் முகவரிக்கும் தொடர்பு கொண்டு, தேவையான தகவலை உடனுக்குடனே பெற்றுக் கொள்ளலாம்.

கிட்டத்தட்ட மாதமிருமுறை பேரவைக்கான மின்னஞ்சற்செய்திமடலும் பொதுமக்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. பல்வேறு அறிவிப்புகள், செய்திக்கட்டுரைகள், பேரவை அலுவற்திட்டங்கள் என்பன பொதுமக்களுடன் பகிரப்பட்டு வருகின்றன. அந்த மின்னஞ்சலைப் பெற விரும்புவோர், மேற்கூறப்பட்ட தகவற்தொடர்புக்குழு மின்னஞ்சலுக்குத் தொடர்பு கொள்ள வேண்டுகின்றேன்.

பேரவை என்பது வட அமெரிக்காவெங்கும் நீக்கமற நிறைந்திருக்க வேண்டுமென்பதுதான் நம் எல்லாருக்குமான நன்மை. ஆகவே, ஆங்காங்கே இருக்கும் தமிழ்ச்சங்கங்களில், இன்னமும் உறுப்பினராகாதவற்றைப் பேரவைக்குக் கொண்டு வந்து சேர்ப்பது உங்கள் கைகளில்தான் உள்ளது. பேரவையின் 2025ஆம் ஆண்டுக்கான 38ஆவது ஆண்டு விழாவில், கூடுதல் சங்கங்களைக் கொணர்ந்து சேர்ப்போமெனச் சூளுரைத்துக் கொள்வோம்! தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம்!!

கபிலன் வெள்ளையா,

செயலாளர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.

ஆசிரியர் மடல்

அன்பிற்கினிய தமிழ் உறவுகளே,

அனைவருக்கும் வணக்கம். நமது பேரவை புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட குறுகிய காலத்தில் பல்வேறு எழுச்சிமிகு நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே. அதே வேளையில் 38-ஆவது பேரவை விழாவுக்கான நிகழ்ச்சி முன்னெடுப்புகளில் முனைப்புடன் இயங்கிக் கொண்டிருக்கின்ற வேளையில் பல்வேறு குழுக்களை அமைத்து அதற்கான பொறுப்பாளர்களை நியமித்து சிறப்புடன் செயலாற்றத் தொடங்கியுள்ளது. புதிதாக அறிவிக்கப்பட்ட அருவி மலர் குழுவின் இதழாசிரியராக பொறுப்பேற்றுள்ள நான் தங்கள் அனைவரின் ஆதரவுடன் தமிழ்ச் சமூகத்திற்கு தமிழ் பணியை செய்யும் தன்னார்வலராக செயல்படுவேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடல் கடந்து வந்த நம்மையெல்லாம் இணைக்கும் ஒற்றை கருவியாக இருப்பது நம் தாய் மொழியாம் தமிழும், நம் தாய் மொழியில் நாம் படைக்கும் இலக்கியங்களும் தான். எந்த ஒரு அமைப்பிற்கும் முகமாக இருப்பது, நிகழ்வுகளின் செயல்பாட்டு விளக்கமாக இருப்பது, சமூகத்தின் மனக்கிடக்கை எழுத்துக்களின் வழியே எடுத்துரைத்து மொத்த சமூகத்தையும் இணைக்கும் பாலமாக இருப்பது அவ்வமைப்புகள் நடத்தும் இதழ்கள் தான். அந்த வகையில் கடல் கடந்து புலம் பெயர்ந்த நம் தமிழ் சமூகங்கள் படைக்கும் கவிதைகள், கதைகள் ,கட்டுரைகள், ஓவியங்கள் மற்றும் நேர்காணல்கள் போன்றவற்றை நம் சமூகத்திற்கு கொண்டு சேர்க்கும் ஊடகமாக நம் பேரவையின் அருவி இதழ் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால் மிகையல்ல.

பருவ காலங்களின் பெயர்களை தாங்கி வரும் நம்முடைய காலாண்டு அருவி இதழானது தற்போது பனிமலராக வெளியிட்டிருக்கிறோம். பனிமலர் இதழுக்கு படைப்புகளை தந்த அனைத்து படைப்பாளிகளுக்கும், அட்டைப்பட ஓவியங்களை தந்த நம்ம ஊர் ஓவியர்களுக்கும், குறிப்பாக மருத்துவம் மற்றும் அறிவியல் சார்ந்த படைப்புகளை தந்த படைப்பாளிகளுக்கும் அருவி இதழின் சார்பாக வாழ்த்துகளையும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல்.

என்ற நாலடியாரின் கூற்றினை நெஞ்சிலே ஏந்தி கற்றலில் நிறைய கற்றவர், குறைவாக கற்றவர் என்ற பேதம் இன்றி நாம் கற்ற அனைத்தையும் படைப்புகள் ஆக்குவோம். இப்படைப்புகளால் அடுத்த தலைமுறையையும் மொழி மற்றும் இனம் காக்க அணியப்படுத்துவோம். ஆறுகளால் சூழ்ந்த ஆழியைப் போல வட அமெரிக்கா முழுவதும் விரவி இருக்கின்ற தமிழ்ச் சங்கங்களால் சூழ்ந்த நம் பேரவையின் எண்ணத்தையும், ஆக்கத்தையும் சிறந்த முறையில் தமிழ்ச் சமூகத்திற்கு கொண்டு சேர்ப்போம். வாருங்கள் கரம் கோர்த்து செயல்படுவோம். நன்றி.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம், அருவி குறித்த பின்னூட்டங்களை aruvimalar@fetna.org என்ற மின்னஞ்சல் முகவரியில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

திருமலைஞானம் சிவஞானம்
அருவி ஆசிரியர்
ரோசெஸ்டர் ஹில்ஸ், மிச்சிகன் தமிழ்ச்சங்கம்.

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை

FEDERATION OF TAMIL SANGAMS OF NORTH AMERICA (FeTNA)

A Registered Non-Profit, Tax exempt 501(C)(3) Organization

செயற்குழு 2024-2026

விஜய் மணிவேல்
VIJAY MANIVEL
தலைவர் | President

எழிலன் ராமராஜன்
EZHILAN RAMARAJAN
துணைத் தலைவர் | Vice President

கபிலன் வெள்ளையா
KABILAN VELLIYA
செயலாளர் | Secretary

ஜான்சிராணி பிரபாகரன்
JANSIRANI PRABAKARAN
இணைச்செயலாளர் | Joint Secretary

வள்ளிக்கண்ணன் மருதப்பன்
VALLIKKANNAN MARUTHAPPAN
பொருளாளர் | Treasurer

சுபா சுந்தரலிங்கம்
SUBA SUNTHARALINGAM
துணைப்பொருளாளர் | Asst. Treasurer

பாரதி பாண்டி
BHARATHI PANDI
இயக்குநர் | Director

கார்த்திக் பெருமாள்
KARTHIK PERUMAL
இயக்குநர் | Director

ஷான் குத்தாலிங்கம்
SHAN KUTHALINGAM
இயக்குநர் | Director

வெற்றிவேல் பெரியய்யா
VETRIVEL PERIYAIYAH
இயக்குநர் | Director

பாலா சுவாமிநாதன்
BALA SWAMINATHAN
முன்னாள் தலைவர் | Ex-Officio Board Member

ஆர்த்திகா குமரேஷ்
AARTHIKA KUMARESH
இளையோர் உறுப்பினர் | Youth Member

ரோஷன் சீனிவாசன்
ROSHAN SRINIVASAN
இளையோர் உறுப்பினர் | Youth Member

www.fetna.org

ஆசிரியர் குழு

திருமலைஞானம் சிவஞானம்
ஆசிரியர்
ரோசெஸ்டர் ஹில்ஸ், மிச்சிகன்

மலர் நடராஜா
இணை ஆசிரியர்
வடகொரலைனா

Dr.வைத்திநாதன் செல்வராஜ்
இணை ஆசிரியர்
மேடிசன், விஸ்கான்சின்

ஜான்சிராணி பிரபாகரன்
பேரவை இணைச்செயலாளர்
விஸ்கான்சின்

பிளாரன்ஸ் கிறிஸ்டோ
துணை ஆசிரியர்
அட்லாண்டா

சுபா காரைக்குடி
துணை ஆசிரியர்
நியூஜெர்சி

நாகராஜன் ராஜேந்திரன்
துணை ஆசிரியர்
மேசன், ஓஹியோ

இந்துமதி ஜெயபால்
துணை ஆசிரியர்
டப்ளின்

கனகப்பிரியா சங்கர்ராஜ்
துணை ஆசிரியர்
ஃபிரிஸ்கோ, டெக்சாஸ்

வீரா கந்தசாமி
துணை ஆசிரியர்
நியூயார்க்

அருள்மொழி
துணை ஆசிரியர்
சியாட்டல், வாஷிங்டன்

விஜியகுமார் ரங்கசாமி
துணை ஆசிரியர்
ஸ்பிரிங் ஹில்ஸ், டென்னஸி

சுப்ரமணிய பெருமாள் திருநாவுக்கரசு
துணை ஆசிரியர்
சால்ட் லேக் சிட்டி, UTAH

37—ஆவது பேரவைத் தமிழ் விழா 2024

செல்வகிரி அருணகிரி 37 –வது பேரவை விழா ஒருங்கிணைப்பாளர்

கார்த்திகேயன் சுப்பா 37 –வது பேரவை விழா இணை ஒருங்கிணைப்பாளர்

தன்னேரில்லா இனிய தமிழ் மொழியை தாய்மொழியாய் கொண்ட தமிழினத்திற்காக எப்பணிக்கும் உயர் பணியாம் எம்தாய் தமிழுக்கும் தமிழ்ச்சொந்தங் களுக்கும் உழைப்பதே யாம் பெற்ற பெரும்பேறு என எப்போதும் உழைத்துக் கொண்டிருக்கும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும் ,வெள்ளி விழாக் கண்ட சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கமும் இதுவரை ஆற்றிய தமிழ்த் தொண்டுகளுக்கெல்லாம் தலையாயதாய்க் கருதி தமிழன்னையின் புகழ் மகுடத்தில் வையமெல்லாம் ஒளிவீச வைரமாமணி பதித்திடும் வண்ணம் பேரவையின் 37வது தமிழ் விழா வரலாற்று நகரம், சிங்காரச் சென்னையோடு தமக்கை உறவுநகரம் (Chennai sister city), டெக்சாஸ் மாநிலத்தின் சான் ஆண்டோனியோவில் 2024ஆம் ஆண்டு ஜூலை 4 முதல் ஜூலை 6 தேதிகளில் சமத்துவத்தீயைச் சுடர் விட்டு எரித்து சமநிலையே என்றும் தமிழர்நிலை என பாரினில் பறைசாற்றிட 'சமத்துவம் தமிழரின் தனித்துவம்' என்ற கருப்பொருளோடு தமிழும் தமிழினமும் பெருமை கொள்ளும் வகையில் செவ்வெனே நடந்தேறியது . உணர்வுகளையெல்லாம் நினைவுகளாக்கிவிட்டுப் போன இந்த வரலாற்று சிறப்புமிக்க இந்த நிகழ்வை தொகுத்து வழங்குவதில் பெரும்பெருமை கொள்கிறேன்.

தமிழரின் தாய்மடியாம் கீழடி, திருவள்ளுவர் கூடம், சான் ஆண்டோனியோ வரலாற்று சின்னம் சமத்துவ தூண்கள் , அலமோ போர் வரலாற்று சின்னம், கிராமத்து கொல்லை புறத்து கேணி, மனுநீதி சோழனின் மணி, தமிழரின் கைத்தொழில் யாதென தலைமுறை தாண்டி விளக்கிட கைத்தறி, பாரம்பரிய உடைகள் விற்பனை நிலையங்கள், பல்வேறு வணிக சிறு வியாபார கூடங்கள், தமிழ் பண்பாடோடு வரவேற்பு வளையங்கள் என வசந்த கால வாயிலில் நின்று வரவேற்கும் சாரல் போல வரவேற்பு வாயில்.

வெற்றி யாதெனின் முடிந்த வரை முயற்சிக்காமல்முடியும் வரை முயற்சிக்க பேரவையின் நிர்வாக குழுவினர் தலைவர் திரு பலா சுவாமிநாதன்

மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்களோடு சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம் நடத்திக் காட்டிய இந்த 37 ஆவது பேரவை பெருவிழா தலைமுறை தாண்டி சொந்தங்களின் மனதில் என்றும் நிலைத்திட உத்வேகமாய் உழைத்திட தலைமை குழு திரு. செல்வகிரி அருணகிரி ஒருங்கிணைப்பாளர் , திரு. கார்த்திகேயன் சுப்பா இணை ஒருங்கிணைப்பாளர், துணை ஒருங்கிணைப்பாளர்கள் திரு. இராஜகுரு பரமசாமி, திரு. வாசுதேவன் நடராஜன், திருமதி. ரமணி ரகுநாத் மற்றும் ஒவ்வொரு செயலுக்கும் படைபல அமைத்து, பல தளபதிகளை நியமனம் செய்து இந்த ஒட்டு மொத்த குழு தமிழர்கள் ஒன்றாதல் கண்டே என சாதித்துக் காட்டியது என்று சொன்னால் அது மிகையாது.

முதல் நாள் ஜூலை 4 ஆம் நாள்:

ஒளி பரவிட குத்து விளக்கு ஏற்றும் நிகழ்வுடன் இனிதே துவங்கியது திரு கௌதம் ராஜன் அவர்கள் ஒருங்கிணைத்த FiTEN உலகத் தமிழ் தொழில் முனைவோர் உச்சி மாநாடு 2024. புதுமையான தொழில்நுட்பங்களை மேம்படுத்த, தொழில் முனைவோர்களை ஆதரிக்க மற்றும் புதிய தொழில் முனைவோர் பலரை உருவாக்கிட, அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை கொள்ள பல்வேறு துறைகளில் சிகரம் தொட்ட பல்வேறு உற்சாகமான பேச்சாளர்களும், பல்வேறு அறிஞர்களும் கலந்து கொண்ட மாபெரும் இந்த மாநாட்டில் முதல் நிகழ்ச்சியாக தமிழக அமைச்சர்கள் மாண்புமிகு. பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பம், மாண்புமிகு. மா. சுப்பிரமணியன், சுகாதாரத் துறை, புதுச்சேரி அமைச்சர் மாண்புமிகு க. இலட்சுமி நாராயணன் , திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன் ஆகியோரின் சிறப்புரையோடு இனிதே தொடங்கியது . இந்த சிறப்புரையில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் தொழில் முனைவோருக்கு தொழில் தொடங்க அழைப்பு விடுக்கப்படத்துடன், தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது .

சிங்காரச் சென்னையோடு தமைக்கை உறவுநகரம் சான் ஆண்டோனியோவின் கௌரவ மேயர் திரு.ரான் நிரேன்பர்க் அவர்களும், சிங்காரச் சென்னையின் மேயர் திருமதி.பிரியா அவர்களும் கலாசார மற்றும் தூதரக உறவுகளைப் மேம்படுத்துவது பற்றி மட்டுமின்றி இரு நகரங்களுக்கு இடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்தவும்,உலக தொழில்நுட்ப புதுமைகள் மற்றும் ஒத்த வளர்ச்சித் தடைகள், இயற்கைப் பேரிடர்கள் எதிர்கொள்ளல் என பல்வேறு துறைகளை பற்றி புரிந்துணர்வு விவாதம் நடைபெற்றது .

உலகளாவிய தொழில்முனைவோர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் என சிகரம்தொட்ட பல ஆளுமைகள் பங்கேற்ற இந்த மாநாட்டில் பெரியவர்கள், இளையவர்கள் மற்றும் பெண்களுக்கான வணிக போட்டி, தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள், தொழில் நடத்துவருக்கான அறிவுரைகள், தொழில் தொடங்க எண்ணம் கொண்டோர் என சிந்தைக்கு விருந்தாக பல்வேறு அறிவியல் தொழில்நுட்பம், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த விவாதங்கள், கலந்துரையாடல்கள், உரையாடல்கள் என பல்வேறு நிகழ்வுகள் நடந்தேறியது .

தொழில் தொடங்க சரியான நாள்: இன்று

சரியான நேரம் : இப்போது...

சரியான நபர்: நீங்கள்

என நம்பிக்கை விதை விதைத்துவிட்டு போன இந்த வரலாற்று நிகழ்வில் எதிர்வரும் காலங்களில் பல்வேறு தொழில் அதிபர்கள் உருவார்கள் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

மாலை பொழுதில் உள்ளூர் கலைஞர்களின் உணர்வான மரபுக் கலைநிகழ்ச்சிகளும், இசை நிகழ்வுகள், வெள்ளித்திரை பிரபல நட்சித்திரங்கள் நடிகர் சூரி, நடிகர் சிவா, நடிகர் ஐஸ்வர்யா ராஜேஷ்,

இயக்குனர் வெங்கட் பிரபு மற்றும் பல தமிழ் திரையுலகத்து நட்சித்திரங்கள் பலர் பங்கேற்ற நட்சித்திர இரவு நிகழ்ச்சி காண்போரை கவர்ந்திழுத்தது.

இரண்டாம் நாள் ஜூலை 5 ஆம் நாள்:

கலைமாமணி TL. மகாராஜன் அவர்களின் தமிழிசை நிகழ்ச்சியில் 37 வது பேரவை பெருவிழா 2024 வின் கருப்பொருளாம் சமத்துவம் தமிழரின் சமத்துவம் என்ற கருப்பொருளை மையமாக கொண்டு அவரே வரிகள் எழுதி இசை அமைத்து பாடிய பாடல் அசையாத இதயத்தையும் தொட்டு பார்த்து தமிழரின் பெருமையை பாரில் உள்ளோர் அனைவரும் தெரியும் வண்ணமும், மகிழும் படியும் இருந்தது என்றால் மிகையாகாது.

இப்பெருவிழாவில் தனித்துவமாய் மொழி அறிவியல் தொழில்நுட்பம், தகவல் தொழில் நுட்பம், மொழியியல், மானிடவியல், கல்வெட்டியல், இதர அறிவுசார் துறைகள், மருத்துவம், பொருளாதாரம் , இலக்கியம் என பல்வேறு துறைகளை சார்ந்த தமிழ் ஆளுமைகள் பங்கேற்ற அறுபத்தருக்கும் மேற்பட்ட இணை அமர்வு நிகழ்ச்சிகளில் தமிழ் சொந்தங்கள் பங்கெடுத்து தத்தம் ஆர்வம்மிக்க துறைகளின் பெரும் ஆளுமைகளின் விவாதங்கள், கலந்துரையாடல்கள், உரையாடல்கள் என பல்வேறு நிகழ்வுகள் நடந்தேறியது. கலை, இலக்கியம் சார்ந்த அமர்வுகள் நடைபெற்றன. பிரதான மேடையில் பெரும்பாலும் திரையுலக, தொலைக்காட்சி நட்சத்திரங்கள், பொதுவெளியில் பிரபலமாக இருக்கின்ற பேச்சாளர்களின் உரைகள், பட்டிமன்றம், கவியரங்கம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. உலகத் தமிழர் சந்திக்கும் சவால்கள் குறித்தும் நிகழ்வில் விவாதிக்கப்பட்டன.

தலைமுறை தாண்டி தமிழ் வாழ்ந்திட இயன்மொழியான,"தமிழால் இணைவோம்! செயலால் வெல்வோம்!!" எனும் கூற்றுக்கு ஏற்ப வயதிற்கேற்ப பல்வேறு பிரிவுகளாக குழந்தைகளுக்கு தத்தம் திறமைகளைத் தமிழ் மொழியால் வெளிப்படுத்தக் காத்திருந்த தீரர்களுக்கு பேரவையே முன்னெடுத்த 'வணக்கம் வடஅமெரிக்கா' நிகழ்ச்சி மூலம் பல கட்டங்களாக நடைபெற்ற சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி, பாடல் போட்டி, ஆடல் போட்டி, குறும்பட போட்டி, பேச்சுப்போட்டி என அனைத்துப் போட்டிக்குமான இறுதிக் கட்ட சுற்றுக்கள் நெறிபிறழா தமிழகத்தில் இருந்து வந்திருந்த தமிழ் இலக்கிய ஆளுமைகளின் தேர்வின் மூலம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. தமிழ் தேனீ, குறள் தேனீ எனச் சிறுவர்களுக்கான போட்டிகள், இலக்கிய ஆர்வலர்களுக்கான வினாடி வினா பட்டியல் நீண்டு கொண்டே போனது .

அமெரிக்கா முழுக்க, பறை கற்றுக்கொள்வதைக் கடந்த சில ஆண்டுகளாக வேட்கை எனக்கொள்ளமால் வேள்வியென, குழந்தைகளும் பெரியவர்களும் கற்று வருகிறார்கள் என்பதை யாவரும் அறிந்ததே. அந்த வகையில் முழுக்க முழுக்க அமெரிக்காவில் வாழும் தமிழர்களால், பறையிசை நிகழ்ச்சி பறையிசையின்மேல் சுமத்தப்பட்டுள்ள நூற்றாண்டு கறையினைப் போக்கும் பெரும் விதமாக பறை ஆசான்கள் திரு மணி மாறன் மற்றும் முனைவர் .திருமதி. அருள்செல்வி அவர்களின் தலைமையில் பறையிசையுடன் சிலம்பம், களரி ஆகிய தற்காப்புக் கலைகளும் நிகழ்த்தப்பட்டன. ஒயிலாட்டம், கூத்து, மற்றும் தமிழிசைப் பாடல்கள் என மரபு நிகழ்ச்சியில் பல இடம் பெற்றன.

திரு.சவுண்டு மணி அவர்களின் இசை நிகழ்ச்சி உள்ளபடியே ரசிகர்களை மிகச்சிறப்பாக கவர்ந்திழுத்து மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. அவர் வாசித்த நகரா, உருமி, பம்பை, உடுக்கை என நாற்பதுக்கும் அதிகமான தோல் வாத்தியங்களை வாசித்துக் காட்டியதுடன் அவரே உருவாக்கிய இசை கருவிகளை வாசித்துக் காட்டியது ஆச்சிரியத்தை வரவழைத்தது .

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையில் நடைபெற்ற, வட அமெரிக்க எழுத்தாளர் மன்றம் ஏற்பாடு செய்திருந்த

"வட அமெரிக்கத் தமிழ் எழுத்தாளர்கள் இணையமர்வில்" வட அமெரிக்க எழுத்தாளர்கள் மற்றும் தமிழ்நாட்டின் இலக்கிய ஆளுமைகள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் கவிஞர் மருதயாழினி பிரதீபா தொடக்கவுரை நிகழ்த்தினார், அதனைத் தொடர்ந்து வலைத்தமிழ் ச.பார்த்தசாரதி அறிமுக உரையையும், எழுத்தாளர் ஆரூர் பாஸ்கர் நோக்கவுரையையும் காணொளி வாயிலாக வழங்கினர்.

விழாவில் தமிழ்நாட்டிலிருந்து கவிஞர் அறிவுமதி எழுத்தாளர் அழகியபெரியவன், எழுத்தாளர் வெண்ணிலா, இசையறிஞர் ஆத்மாநாம், முனைவர் இளங்கோவன் மற்றும் இசைக்குயில் திருமிகு ஜோதி கலை ஆகியோர் கலந்துகொண்டனர்

அதே நிகழ்வில் கீழ்காணும் மூன்று நூல்கள் சிறப்பு விருந்தினார்களால் வெளியிடப்பபட்டது அவையாவன

1. திருமிகு கவிதா அ.கோ. அவர்களின் “கார்மேகத்தில் ஓர் ஒளித்திரள் ” கவிதை நூல் வெளியீடு

2. *Thirukkural Translations in world Languages*, ஆசிரியர்கள்: ச.பார்த்தசாரதி , இளங்கோ தங்கவேலு, செந்தில் துரைசாமி, முனைவர். அஷ்ரப் , இராஜேந்திரன் IRS

3. திருமிகு ஜெயா மாறன் அவர்களின் “எங்கேயோ கேட்ட குரள்” கதை வடிவிலான நூல்

அமெரிக்காவில் முதன் முறையாகக் கூடும் வட அமெரிக்கத் தமிழ் எழுத்தாளர் மன்ற இணையமர்வில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்கள் கவிஞர் அறிவுமதி, எழுத்தாளர் நா. முத்துநிலவன், எழுத்தாளர் அழகியபெரியவன், எழுத்தாளர் வெண்ணிலா, முனைவர் நா. இளங்கோவன் ஆகியோர் எழுத்தாளர்களுக்கு வாழ்த்துரை வழங்கியதோடு வளரும் எழுத்தாளர்களுக்கு நல்ல அறிவுரைகளையும் கருத்துகளையும் வழங்கினர்.

வட அமெரிக்க எழுத்தாளர்களை கவிஞர் திருமிகு அருள் ஜோதி அவர்கள் அறிமுகப்படுத்த, சிறப்பு விருந்தினர்களை எழுத்தாளர்கள் மருதயாழினி பிரதீபா, ராஜிவாஞ்சி, கிரேஸ் பிரதீபா, கவிதா அ. கோ, திரு வாஞ்சிநாதன் ஆகியோர் அறிமுகம் செய்தனர். நிகழ்ச்சியில் உறுதுணையாக திரு.வாஞ்சி அவர்கள் தொழில்நுட்பத்தை பார்த்துக்கொண்டார், விழாவில் தன் தாய் கிரேஸ் பிரதீபா அவர்களுக்கு உறுதுணையாக வந்திருந்த கல்லூரி மாணவன் ஆலனும் அவரால் இயன்ற அனைத்து உதவுகளையும் ஆற்றியது நன்றிக்குரியது.

தமிழர் செல்லுமிடமெல்லாம் சிறப்பு எய்தட்டும்..! சீர்மிகு எழுச்சிதமிழரின் புகழ் திசையெட்டும் பரவட்டும் என எழுச்சிமிகு உரை நிகழ்த்திய மாண்புமிகு ஆளூர் ஷாநவாஸ் அவர்களின் உரையானாலும் சரி , அனல் பறந்த உணர்வான உரை ஒன்றை நிகழ்த்திய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு வேல்முருகன் அவர்களின் உரையானாலும் சரி, திரு.ஆர். பாலகிருஷ்ணன் IAS அவர்களின் பண்பாட்டின் பயணத்தை பற்றிய பண்பான உரையானாலும் சரி மற்றும் நடைபெற்ற அனைத்து ஆளுமைகளின் உரைகளும் காண கிடைக்கா அற்புத நிகழ்வு .

தமிழ் சொந்தங்களின் இறுக்கமாக இருந்த மனமெல்லாம் நெருக்கமாகி போனது நகைச்சுவை ஸ்டாண்டப் காமெடி கலைஞர் திரு ஜெகன் கிருஷ்ணன் அவர்களின் காமெடி ஸ்டாண்டப் நிகழ்ச்சி .

நடிகர் சூரி அவர்களின் மேடைப்பேச்சு உள்ளபடியே நகைச்சுவையோடு நெகிழ்ச்சியும் நிறைந்திருந்தது. அவர் நகைச்சுவையோடு அவர் கண்ட வலியும் , உழைப்பின் வெற்றியை பற்றியும் பேசியது பார்வையாளர்களை சிறப்போடு சிரிப்போடு கண்களில் கண்ணீர் வரவழைத்தது என்பது உண்மை . இறுதி நிகழ்வாக

விஜய் டிவி புகழ் அருணா சகோதரிகளின் இனிய பாடல் நிகழ்வுகளுடன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றது

மூன்றாம் நாள் – ஜூலை 6:

தமிழர் மரபு சார்ந்த பல்வேறு போட்டிகளில் பாங்குடனே பங்கேற்று வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டும் நிகழ்வுடன் இனிதே தொடங்கின மூன்றாம் நாள் நிகழ்வுகள். முனைவர் அருட்செல்வியின் வழிகாட்டுதலோடு சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்தின் பறை இசைப் பயிற்சியாளர்களும், கலைஞர்களும் இணைந்து வழங்கிய ‘பறையும் பரதமும்’ கண்களுக்கு விருந்தாக அமைந்தது. தொடர்ந்து பிற தமிழ்ச் சங்கங்களின் கலை நிகழ்ச்சிகளும் இனிதே அரங்கேறின. கொடிகாத்த குமரன் மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் பெயர்களால் அமைந்த இரு அணிகள் பங்கேற்ற வினாடி வினா நிகழ்ச்சி விருவிருப்பாக அறிவுக்கு விருந்து படைத்தது.

பேரவையின் அறுபதுக்கும் மேற்பட்ட அனைத்து உறுப்பினர் தமிழ்ச் சங்கங்களும் உற்சாகமாய்ப் பங்கேற்ற சங்கங்களின் சங்கமம் அணிவகுப்பு சான் ஆண்டோனியோ நதியில் படகு சவாரியாகவும், பின்பு நதியையொட்டி அமைந்த நடைபாதை வழி விழா அரங்கிற்குள் நுழைந்தது தனி அழகு! விழா சிறப்புற ஓய்வறியா உழைப்பை நல்கிய தன்னார்வலர்கள் அனைவரையும் மேடையேற்றி சிறப்பித்தது அழகோ அழகு!

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கம் தலைமுறை தாண்டி நின்றிட தொலைநோக்குப் பார்வையோடுதொலைநோக்கு பணியை நம் இனத்திற்கு பணியாற்றிட பம்பரமாய் தலைவர் திரு பாலா சாமிநாதன் அவர்களின் தலைமையின் நிர்வாக குழுவின் பிரிவு உபசார நிகழ்வும், பேரவையின் மறைபணியாவும் முடித்திட புதியதாய் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் திரு மணிவேல் மற்றும் புதிய நிர்வாக குழுவினரின் அறிமுக விழாவும் இனிதே நடைபெற்றது.

மூன்று நாள் கொண்டாட்டத்தின் முத்தாய்ப்பு நிகழ்வாக விஜய் தொலைக்காட்சிப் புகழ் Band மணி அவர்களின் தலைமையில் இசைக் கலைஞர்கள் கார்த்திக் தேவராஜ்,வெற்றி மற்றும் பாடகர் பிரதீப்குமார் தங்கள் குழுவினருடன் இணைந்து நடத்திய மாபெரும் இசை நிகழ்ச்சி நள்ளிரவு தாண்டியும் இசை விருந்து படைத்தது. அவ்விருந்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

பேரவை விழாவினைச் சிறப்புற ஒருங்கிணைத்து மாபெரும் வெற்றிவிழாவாக மாற்றிய நிர்வாகிகள், தன்னார்வலர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் அனைவரும் போற்றுதலுக்குரியவர்கள். அவர்கள் அத்துணைப் பேர்க்கும் என் நன்றிகள் உரித்தாகுக!

> “தமிழர் ஒற்றுமையின் பாரினில் பறைசாற்றிட எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே என்னும் கூற்றுக்கு ஏற்ப சொந்தங்கள் எல்லாம் ஒன்று கூடி கொண்டாடிய இந்த மாபெரும் பேரவையின் பெருவிழா”

இப்படிப் 3500 மேற்பட்ட தமிழ் சொந்தங்கள் பங்கேற்ற இந்த மாபெறும் பெருவிழாவில் பார்வையாளர்களைக் சமத்துவமாய் தனித்துவமாய் தமிழ் மொழி அறிவியல் தொழில்நுட்பம், தகவல் தொழில் நுட்பம், மொழியியல், மானிடவியல், கல்வெட்டியல், இதர அறிவுசார் துறைகள் என அனைத்திலும் தொடர்ந்து வளர்ச்சி கண்டு தமிழும் தமிழினமும் என்றும் ஏற்றம் பெற்றிட வேண்டும் என்ற ஆவலுடன் பல்வேறு நிகழ்ச்சிகள் பல இருந்தன. அத்தனை நிகழ்ச்சிகளைப் பற்றியும் குறிப்பிட வேண்டுமென்றால் ஒரு புத்தகமோ, தொடரோ எழுத வேண்டி வரும்,. நேரம் போதாது .

அலைகள் அமைதி உற்ற சான் ஆண்டோனியோ புகழ்ஆற்றுநடை(River Walk) நீர்தடாகத்தில்பெருவிழாவின் இறுதி நாளில் மஞ்சள் கதிர் விரியும் ஓர் மாலைப் பொழுதில் எழிலுடன் அனைத்துச் சங்கங்களும் பங்குபெற்ற சங்கங்களின் சங்கமம் அமைதி படகு ஊர்வலம் தமிழரின் ஒற்றுமையை பறைசாற்றியது.

தமிழர் ஒற்றுமையின் பாரினில் பறைசாற்றிட எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே என்னும் கூற்றுக்கு ஏற்ப சொந்தங்கள் எல்லாம் ஒன்று கூடி கொண்டாடிய இந்த மாபெரும் பேரவையின் பெருவிழா உணர்வுகளை எல்லாம் நினைவுகளாக்கி தமிழர்கள் இணைந்தால் எத்தகைய மாபெரும் சாதனைகளை செய்யலாம் என்னும் கூற்றை மீண்டும் நிரூபித்து சென்ற இந்த விழாவை முன்னின்று நடத்த வாய்ப்பளித்த பேரவைக்கு, உழைத்திட்ட அனைத்து உறவுகளுக்கும் மகிழ்வோடும் நெகிழ்வோடும் நன்றி நவில்கிறேன்.

அமெரிக்க பள்ளிகளில் இந்திய மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

வீரா கந்தசாமி (நியூயார்க் தமிழ்க் கல்வி கழகம்)

அமெரிக்கா, கல்வி தரத்தில் முன்னணியில் உள்ள ஒரு நாடாக இருப்பினும், இந்திய குழந்தைகள் இங்கு பள்ளிகளில் கல்வி கற்பதில் பல சவால்களை தினமும் எதிர்கொள்கின்றனர்.

மொழி தொடர்பான சிக்கல்கள்:

இந்திய மாணவர்கள், குறிப்பாக புதிதாக குடியேறிய குழந்தைகள், அமெரிக்கா முழுவதும் ஆங்கிலம் பேசும் சூழலில் நன்கு பழகவில்லை என்பதால் கல்வி மற்றும் சமூகத்தை புரிந்துகொள்ள அவர்களுக்கு கடினமாக இருக்கிறது. தாய்மொழியில் நன்கு பேசக்கூடிய இந்த மாணவர்கள் ஆங்கிலத்தை கற்றுக்கொள்வதில் சிரமம் அனுபவிக்கின்றனர்.

வீரா கந்தசாமி
நியூயார்க்

கலாச்சார வேறுபாடுகள்:

அமெரிக்க பள்ளிகளில் உள்ள கலாச்சார சூழல், இந்திய மாணவர்களுக்கு புதியதாக இருக்கிறது. பாடங்கள், ஆசிரியர்-மாணவர் உறவு, மற்றும் கூடுதல் பண்பாட்டு செயல்பாடுகள் அவர்களுக்கு புதிய அனுபவமாகவே இருக்கிறது. சில குழந்தைகள் இனம் அல்லது மதம் அடிப்படையில் அன்பில்லாத சமூகவியல் பார்வைகளை எதிர்கொள்கின்றன.

கல்வி முறை மாறுபாடு:

இந்திய மாணவர்களுக்கு அமெரிக்காவின் திறந்த கல்வி முறை, சுயாதீன கற்றல் மற்றும் பரந்த பாடத்திட்ட முறையை ஏற்றுக்கொள்ள சில நேரம் சிரமமாக இருக்கிறது.இந்திய பள்ளிகளில் அதிகமாக மதிப்பெண் அடிப்படையிலான முறைக்கு பழகியிருப்பதால், அமெரிக்காவின் செயல்பாட்டு திறன் அடிப்படையிலான மதிப்பீட்டு முறை அவர்களுக்கு புதிதாக இருக்கிறது.

சமூக ஒத்திசைவு பிரச்சினைகள்:

புதிதாக குடியேரிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள், அமெரிக்க சமூகத்துடன் கலந்துகொள்வதில் சிரமப் படுகின்றார்கள். புதிய சூழலுக்கு பழகாத இந்த மாணவர்கள் சில நேரம் சகமாணவர்களின் கொடைமுடி (*bullying*) அல்லது தனிமைப்படுத்தலுக்கு ஆளாகப் படுகின்றார்கள்.

பெற்றோர்கள்-கல்வியாளர்களின் ஒத்துழைப்பு குறைபாடு:

இந்திய பெற்றோர்கள் அமெரிக்க கல்வி முறையைப் பற்றிய முழுமையான புரிதல் இல்லாததால், அவர்களுடைய குழந்தைகளுக்கு வேண்டிய வழிகாட்டலை வழங்க முடியாமல் இருக்கறார்கள். அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்கிடையிலான பாரம்பரிய வேறுபாடுகள் குழந்தைகளின் வளர்ச்சிக்கு சிக்கல்களாக மாறுகிறது. சில குழந்தைகள் சவால்களை எதிர்கொள்ள முடியாமலும் கல்வி, சமூக ஒத்திசைவு, மற்றும் பெற்றோர் எதிர்பார்ப்புகளின் காரணமாக அதிக மன அழுத்தம் அனுபவிக்கின்றார்கள்.

தீர்வுகள்:

பெற்றோர்கள் பள்ளிகள் திறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு புதிய நாட்டிற்குச் குடிபெயரலாம். இதனால் குழந்தைகள் புதிய சூழலுக்கு பழகிக் கொள்ள முடியும். இங்கு உள்ள இந்திய சமூக அமைப்புகளில் சேர்ந்து,சககுழந்தைகளிடமிருந்து ஆலோசனைகளையும், யோசனைகளையும் பெற்றுக் கொள்ளலாம். பள்ளி மற்றும் சமூகத்துடன் கலந்துகொள்வதற்கான செயல்பாடுகளை பெற்றோர்கள் குழந்தைகளுக்கு சொல்லி தரவேண்டும். ஆங்கிலத்திற்கான சிறப்பு வகுப்புகள் மற்றும் வழிகாட்டுதல்கள் மாணவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். இந்த அரசு கல்வி, மொழி மற்றும் பண்பாட்டு மேம்பாட்டுக்காக சிறப்பு திட்டங்களை உருவாக்க வேண்டும்.

அமெரிக்காவில் இந்திய குழந்தைகள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் அவர்களின் கல்வி மற்றும் சமூக வளர்ச்சியைத் தடை செய்யக்கூடியவை. ஆனால் முறைசார்ந்த தீர்வுகள், நேர்மறையான முறைகள் மற்றும் பள்ளி, சமூக அமைப்புகளின் ஒத்துழைப்பால் இந்த சிக்கல்களை கடந்து முன்னேற முடியும். குழந்தைகள் தனிநபர் திறமைகளுடன் வளரும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

November 27 2024 அன்று மெய்நிகர் நினைவேந்தல் நிகழ்வாகப் பேரவையினால் ஒழுங்கமைக்கப்பட்ட மாவீரர் நாள் இடம்பெற்றது.

மாவீரர்கள் வீரத்திற்கும், அறத்திற்கும் சான்றானவர்கள். சிறீலங்கா தமிழின அழிப்பு அரசினை எதிர்த்து தமிழ் மக்களுக்காகவும் தமிழீழ மண்மீட்புக்காகவும் போராடியவர்கள். அதற்காகவே தம் இன்னுயிரை ஈந்தவர்கள். அவர்களின் அர்ப்பணிப்புக்களே தமிழ் மக்களை அரசியல் மற்றும் இராணுவ ரீதியாகப் பலப்படுத்தி இருந்தது. தமிழ் மண்ணிற்காக மரணித்த இந்த வீர புலி மறவர்களை நினைவுகூரும் நாள் தான் மாவீரர் நாள்.

வீரச்சாவடைந்த வீரர்களை நினைவுகூரும் வழமை சங்ககாலம் முதற்கொண்டே இருந்து வந்துள்ளது. நடுகல் வழிபாட்டு முறைமூலம் நாம் இவற்றினை அறிந்து கொள்ள முடியும்.

தமிழீழத்தில் இருபத்தேழு நிரந்தர மாவீரர் துயிலும் இல்லங்களும், 2009 இல் இறுதிப்போர்க் களங்களில் உருவாக்கப்பட்ட ஆறு துயிலும் இல்லங்களும் உள்ளன. சிறிலங்காவினால் இந்த துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்ட நிலையில் இருக்கின்ற போதிலும், அவர்களின் அச்சுறுத்தலையும் மீறித் தமிழ் மக்கள் இன்றும் மாவீரர் நாளில் இந்தத் துயிலும் இல்லங்களுக்குச் சென்று மாவீரர்களை நினைவுகூருவர். உலகெங்கும் வாழும் தமிழர்கள், தங்களது இடங்களில் இந்த நினைவேந்தலை நடத்துகின்றனர்.

இந்த ஆண்டு இந்த நினைவேந்தல் "தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே..." என்ற மாவீரர் பாடலொலிக்கப் பேரவையினால் உணர்வுபூர்வமாக நிகழ்த்தப்பட்டது.



குறை ஒன்றும் இல்லை!

‘மிதுனா, தயார்படுத்தி வைத்திருந்த எல்லா கோப்புகளும் சரியா இருக்கானு பாத்துட்டியா?’

‘எடுத்துக்கிட்டேன் மாதவ். நல்லபடியா நடந்தப்புறம் போன் பண்றேன்’

‘எப்படி நடந்தாலும் போன் பண்ணு’ என்ற கணவனை சிரித்த படியே பார்த்து விட்டு கிளம்பினாள்.

இன்று பள்ளியில் பள்ளி நிர்வாகத் தலைவருடன் ஆசிரியர்கள் கூட்டம், சாதாரணமாய் நடக்கும் கூட்டமல்ல. இன்று இவளை குற்றவாளிக் கூண்டில் நிற்க வைத்து கேள்வி கேட்க கூட போகும் கூட்டம்.

‘அப்பா, அம்மாக்கு ரொம்ப கவலையா?’ என நேற்றிரவு குழந்தை கேட்டபோது மாதவ் சொன்ன அந்த வாக்கியம் சுரீரென சுட்டது. மிகச் சரியான சொற்றொடர்! ‘ஆட்டி வைக்கும் ஆட்டிசம்’

ஷீலா ரமணன்,
சான் அன்டோனியா

இக்காலத்தில் பலரும் பரவலாகக் கேட்கும் வார்த்தை ஆட்டிசம். முன்பெல்லாம் கதைகளில் சினிமாக்களில் பார்த்த சில பிரச்சனைகள், சங்கடங்கள் தங்கள் வீடுகளிலும் அக்கம் பக்கங்களில் இக்காலங்களில் சந்திக்கின்றோம். அதேநேரம் அதனைப் பற்றிய விழிப்புணர்வுகளும் நிறையவே வந்திருக்கின்றன. இருந்தாலும் அதனை உடனிருந்து அனுபவிக்காத பலரின் மனம் இன்றும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது மட்டுமல்லாமல் வெறுக்கின்றது.

இங்கு தான் மக்கள் தப்பு பண்ணுகிறார்கள் என்பதே மிதுனாவின் வாதம். ஆட்டிசம் என்பது மூளை நரம்பு வளர்ச்சி சார்ந்த குறைபாடுகளுள் ஒன்று, நோயல்ல. உங்கள் மொழியை குழந்தையின் நிலைக்கு ஏற்ப மாற்றுங்கள் தெளிவாகப் பேசுங்கள், நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதைக் காட்டும் படியான சைகைகளை பயன்படுத்துங்கள்.

குழந்தைகளின் பேச்சை, தகவல் தொடர்பு முயற்சிகளை நீங்கள் கவனத்துடன் ஏற்றுக் கொள்கிறீர்கள் என்பதை நிரூபிக்கவும், அவற்றை ஒருபோதும் கைவிடாதீர்கள்.

மற்ற குழந்தைகளின் நடத்தையை புரிந்து கொள்ள உங்கள் பிள்ளைக்கு கற்றுக் கொடுங்கள் மற்றும் என்ன, எப்படி செய்ய வேண்டும் என்பதற்கான உதாரணத்தைக் காட்டுங்கள். மற்றவர் களுடன் ஒத்துழைக்கும் விளையாட்டை ஊக்குவியுங்கள். சின்ன சின்ன முன்னேற்றங்களை எல்லாம் பாராட்டுக்கள். இது அவர்களின் சமூக திறன்களை மேம்படுத்த உதவும்.

முக்கியமாக குழந்தை உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இவ்வாறெல்லாம் சமீப காலத்தில் ஒரு சில வகுப்பு ஆசிரியர்களிடம் விளக்கிப் பேசப்போகி பள்ளியில் பலருக்கும் பகையானாள்.

மிதுனா ஒரு பெரிய தனியார் பள்ளியில் சிறப்பு ஆசிரியராக வேலை பார்க்கிறாள். ஆங்கில ஆசிரியராக உள்ளே நுழைந்தவள், அங்கு அவள் செல்லும் சில வகுப்பறைகளில் ஓரிரு ஆட்டிசம் உள்ள குழந்தைகள் சரியாகக் கவனிக்கப்

படாமல் இருப்பதை அறிந்தாள். அதிகப் பணம் கட்டி சேர்க்கிறார்கள், இங்கே தங்கள் குழந்தைகளுக்கு சில அங்கீகாரங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில். ஏனெனில் பல பெற்றோர்கள் கூறியதிலிருந்து புரிந்து கொண்டாள். ஆனால் பெற்றோரிடம் இந்நிர்வாகமோ ஆசிரியர்களோ கொடுக்கும் நிறைய நம்பிக்கைகள் அத்தனையும் பொய் என உணர்ந்த போது அக்குழந்தைகள் மேல் பாவமும், இரக்கமும் தோன்றியது. மனநல மருத்துவரான தன் தோழியிடம் கடந்த ஆறு மாதங்களாக இதைப் பற்றி கேட்டு அறிந்து சில உதவிகளின் மூலம் அக்குழந்தைகளை கையாளத் தொடங்கினாள் மிதுனா.

அங்கு தான் பிரச்சனை துவங்கியது. பிற ஆசிரியர்கள் தங்களால் முடியாததை, தங்கள் கவனமின்மையை இவள் உறுதிப்படுத்துகிறாளே என்ற கோபம் தீயாய் பரவி அங்கே இவளுக்கு எதிரான குழு தொடங்கியது. அதன் பொருட்டு இவளின் தலையீட்டை நிறுத்தவும், புகார்கள் கூறவும் ஆரம்பித்தனர். அவள் நல்லது தான் செய்கிறாள் என பல பெற்றோருக்கே தெரிந்தாலும் அவர்களாலும் ஏதும் செய்ய முடியவில்லை.

இறுதியில் இதோ வெளிமாநிலம் சென்றிருந்த பள்ளியின் நிர்வாகி வரவழைக்கப்பட்டார்! இன்று பஞ்சாயத்து.

சில வகுப்புகள் விளையாட்டு ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டு உடற்பயிற்சிக் கூடத்தில் மிதுனாவை எதிர்க்கும் ஆசிரியர்களுடன் சந்திப்பு ஏற்பாடானது. கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கு இவள் மேல் குற்றங்கள் வைக்கப்பட்டன. நிர்வாகிக்கு, அவரது பிள்ளைகள் நல்ல நிலையில் வாழ்க்கை அமைந்து வெளிநாட்டில் வாழ்கின்றதால் யாரைப்பற்றியும் கவலைப்பட்டது போல் தெரியவில்லை. இவளின் முயற்சிகள் பள்ளியின் வளர்ச்சியை பாதிப்பதாகவே உணர்ந்தார்.

“சார், விளையாடுவதற்கும், கற்றுக் கொள்வதற்கும், வேலை செய்வதற்கும் எப்போதும் வெளிப்புறத்துக்கே கூட்டிட்டுப் போறாங்க, கலர் பெயிண்ட் அடிச்ச சுவர்கள் வேணும், நல்ல ஒளி வேணும். கண்ணைக் கவரும் வால்பேப்பர்கள், வடிவமைக்கப்பட்ட திரைச்சீலைகள், பிளைண்ட்கள் அல்லது தரைவிரிப்புகளை ஒற்றை நிறத்தில் தொடங்கி படிப்படியாக நிறங்களை சேகரிக்கும் ஏற்பாடு செய்யணும், பூட்டக்கூடிய பெட்டிகள் அல்லது பெட்டிகளில் பொம்மைகளை ஏற்பாடு செய்யனும், விஷயங்களை ஒழுங்கமைக்க, பெட்டிகளை லேபிளிடுங்க அல்லது பிக்டோகிராம்களைப் பயன்படுத்துங்க.

(ஒவ்வொரு பெட்டியிலும் பொம்மைகளின் குழுக்களின் வரைபடங்கள்). வகுப்புக்கு வகுப்பு அக்குழந்தைகளை அலைக்கலைக்காமல் இருக்கனும் என ரொம்ப எங்களை தொந்தரவு பண்றாங்க சார்” என துக்கம் தொண்டையை அடைக்க புகார் கூறிக்கொண்டே வந்தனர்.

நல்ல குடிமக்களை உருவாக்கும் சக்தி கொண்ட, பாரபட்சம், பொறாமை என இல்லாது இரக்கமும் அன்பும் சொல்லித் தரவேண்டிய ஆசிரிய நண்பர்கள், தன் நிலை அறியாத அப்படிப்பட்ட நிலையில் உள்ள குழந்தைகளை ஒரு பொருட்டாகவே மதிக்காது இவ்வாறெல்லாம் புகார் சொன்னது மிதுனாவுக்கு வருத்தமும் கோவமும் அளித்தது.

மிதுனாவோ கொஞ்சமும் தடுமாறாமல் ஒரு இறுக்கத்தில் இருந்த பள்ளி உரிமையாளருக்கு, பாரதியின் வரிகளையும், நமக்கெல்லாம் இக்காலத்தில் எடுத்துக்காட்டாக வாழ்ந்து மறைந்த அப்துல் கலாம் ஐயாவின் நம்பிக்கை வார்த்தைகளையும் சொல்லி, ”நம்மைப் போலவே அக்குழந்தைகளை பாவியுங்கள். அதற்கான முயற்சி எடுக்கும் என்னைப்போன்ற ஆசிரியர்களை நிறைய உற்சாகப்படுத்துங்கள், இவர்கள் மனதை விசாலப்படுத்துங்கள்” என பலவாறு எடுத்துக் கூறி விட்டு எழுந்தாள்.

நிர்வாகி ஏதும் பதில் கூறு முன்னும், இவள் அவரிடம் திட்டு வாங்குவாள் என எதிர்பார்த்து காத்திருந்தவர்கள் முன்னும் எதையும் எதிர்பார்க்காது, ” நான் தொடர்ந்து என் செயல்களை செய்யத்தான் போகிறேன், இப்பள்ளியில் இல்லையென்றாலும் எப்பள்ளியிலும் என்னால் முடியும்” என நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையுடன் அவ்விடத்தை விட்டு வெளியேறினாள்.

பனியின் மடியில் பாரம்பரியத்தின் சுவை

(The Taste of Tradition Amidst the Snow)

டாக்டர் பத்மபிரியா வேலுப்பிள்ளை மெய்கண்டன்

Greater Milwaukee Tamil Sangam, Wisconsin

அமெரிக்கா எனும் புதிய மண்ணில் என் வாழ்க்கையின் அடுத்த அத்தியாயம் ஆரம்பமானது. பனி எனக்கு ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது, புதிய மனிதர்கள் என் மனதை நெகிழச்செய்தார்கள், மற்றும் எனது பாரம்பரிய உணவு என்னுடைய அடையாளத்தை அழகாக விளங்கச் செய்தது. என் நாட்டின் வெப்பமான நினைவுகளும், இங்கு கண்ட அன்பான நட்பும், எனக்கு மறக்க முடியாத அனுபவங்களை வழங்கின.

அமெரிக்காவில் நான் சந்தித்த முதல் சில தினங்கள் என்னை மொத்தத்தில் மாற்றியது. பணி இடத்தில் இருந்த சில அமெரிக்க நண்பர்கள் கேட்ட முதல் கேள்வி, “உங்கள் வீட்டை நினைத்து மிஸ் செய்கிறீர்களா?” அந்த கேள்வி என் இதயத்தை உலுக்கியது. நான் சிரித்தபடியே, என் கிராமத்தின் மழையினால் ஈரமான மணலையும், எளிமையான வாழ்க்கையையும் அவர்கள் மத்தியில் பகிர்ந்தேன்.

அவர்களின் பாராட்டுகளும், உளமார்ந்த சிரிப்பும், என் சொந்த நாட்டின் சிறப்புகளை உணர்ந்து கொள்ள நான் பெருமையாக உணர வைத்தது.

ஒரு குளிர்ந்த மாலையில், பனியால் உறைந்த கை நிறைய கனவுகளுடன், என் அமெரிக்க நண்பர்களை என் வீட்டிற்கு அழைத்தேன். மசாலா தோசையும், கறிவேப்பிலை மணமும், சூடான சாம்பாரின் சுவையும், அவர்கள் இதயத்தை கவர்ந்தது.

“இந்த சுவை உங்கள் நாட்டின் உணர்வின் பிரதிநிதியாக இருக்கிறதா?” என்று ஒருவர் கேட்டார். அந்த கேள்வி என்னுடைய கண்களில் கண்ணீர் வரவழைத்தது. உணவின் மூலம் என் பாரம்பரியத்தை பகிர்ந்து கொள்ளும் அந்த தருணம் என்னை மிகவும் நெகிழச் செய்தது.

தீபாவளி என் வீட்டில் ஒளிமயமாக அமைந்த நாள் ஒரு சிறப்பான தருணமாக மாறியது. வண்ணமயமான கோலங்கள், மெல்லிய விளக்குகள், மற்றும் லட்டு, மைசூர்பாக் போன்ற இனிப்புகளுடன் நான் நண்பர்களுக்கு என்னுடைய பாரம்பரியத்தை வழங்கினேன்.

“இந்த தீபாவளி எங்கள் வாழ்வின் மிகவும் அற்புதமான அனுபவமாக இருக்கும்,” என்று அவர்கள் கூறினார்கள். அந்த வார்த்தைகள் என் இதயத்தில் தீபங்களாக ஒளிர்ந்தன.

ஒரு முறை பனியில் நடந்து செல்லும் போது, என் நாட்டின் மழை நாட்களை நினைத்தேன். என் வீட்டின் வாசலில் அமர்ந்து குளிர்ந்த மழையில் சூடான தேநீர் குடித்த தருணங்கள் என் இதயத்தை வெப்பமாக்கின. அமெரிக்காவின் பனியில் ஒரு மாறுபட்ட குளிர் இருந்தாலும், என் நாட்டின் வெப்பமான நினைவுகள் எனக்கு ஓர் ஆறுதலாக இருந்தன.

பனியில் குளிர்ந்த காபி சிப்பிடும் ஒவ்வொரு தருணமும், என் கிராமத்தின் மண் மணம் மற்றும் பாரம்பரியங்களின் ஒவ்வொரு சுவையும் என் மனதில் மீண்டும் உயிர் பெற்றது.

பாரம்பரியம் எங்கு சென்றாலும் மாறுவதில்லை; அது நம்முடன் எப்போதும் இணைந்து இருக்கிறது. அமெரிக்காவின் பனிக்காலத்தில் நான் உணர்ந்த வாழ்க்கையின் அழகும் என் சொந்த பாரம்பரியத்தின் பெருமையும் என் வாழ்வின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் சுவாரஸ்யமாக மாற்றியது.

இந்த அனுபவம் எனது இதயத்திலும், சொந்த நாட்டின் அடையாளத்தையும் இணைத்து நின்றது, அது மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள ஒற்றுமையின் பேரெழுச்சியையும் உணர வைத்தது.

ஆ.இரா. வேங்கடாசலபதிக்கு 2024ம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது



திசம்பர் 18, 2024 அன்று சாகித்திய அகாதெமி தமிழ் மொழிக்கான சாகித்திய அகாதெமி விருதை அறிவித்தது (21 இந்திய மொழிகள் உட்பட). திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908 (*Tirunelveli ezhuchiyum Va.Vu.Ci.yum 1908*) நூலுக்கு (ஆராய்ச்சி பிரிவில்) ஆ.இரா. வேங்கடாசலபதிக்கு சாகித்திய அகாதெமி விருது அறிவித்துள்ளது. 2022-இல் காலச்சுவடு பதிப்பகத்தாரால் இந்நூல் வெளியிடப்பட்டது. 114 ஆண்டுகளுக்கு முன்பு மார்ச் 1908இல், சுதந்திரப் போராட்ட வீரர் பிபின் சந்திராவைப் புகழ்ந்து பேசியதற்காக வ.உ.சி கைது செய்யப்பட்டதை அடுத்து, திருநெல்வேலியில் நடந்த எழுச்சியை இந்த நூல் கூறுகிறது.

மார்ச் 8, 2025 அன்று புது தில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் விருது வழங்கப்படும். Dr. S. பாலசுப்ரமணியன் (பாரதிபாலன்), திரு. இமயம் மற்றும் திரு. மறைமலை இலக்குவனார் ஆகியோர் நடுவர்களாக இருந்த அமர்வில் திரு. ஆ. இரா. வேங்கடாசலபதியை ஒருமனதாக தேர்ந்தெடுத்தனர். திரு. ஆ. இரா. வேங்கடாசலபதிக்கு பேரவையின் (FeTNA, USA) சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்த்துகள்

வாழ்த்துகள்

விளக்கு இலக்கிய அமைப்பு (அமெரிக்கா)

மு. சுந்தரமூர்த்தி,
டென்னிசி

வட அமெரிக்கத் தமிழ் இலக்கிய ஆர்வலர்களின் முயற்சியால் 1994 ஆம் ஆண்டு "விளக்கு இலக்கிய அமைப்பு" (*Vilakku Literary Society, Inc*) உருவாக்கப்பட்டது. இதைப் பற்றிய அறிவிப்பு 1994 ஆம் ஆண்டு நியூ ஜெர்சியில் நடந்த வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் மாநாட்டு மலரில் வெளியானது. அன்றிலிருந்து கடந்த 30 ஆண்டுகளாக தொடர்ந்து இயங்கி வருகிறது. விளக்கு அமெரிக்காவில் வரிவிலக்கு பெற்ற அமைப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

விளக்கு அமைப்பின் மைய நோக்கம் நவீன கலை, இலக்கியத்தைப் பரப்புவதும், இத்துறைகளில் தங்கள் படைப்புகள், ஆய்வுகள், மொழிபெயர்ப்புகள் மூலமாக காத்திரமான பங்களிப்புகள் வழங்கிய படைப்பாளிகளை அங்கீகரித்து பெருமைப்படுத்துவதும் ஆகும். இது அரசு நிறுவன விருதுகளால் அங்கீகரிக்கப்படாத படைப்பாளிகளின் மீது வெளிச்சம் பாய்ச்சுவதற்காக ஒளிரும் விளக்கு. அதன்படி நவீனத் தமிழ் இலக்கிய முன்னோடி புதுமைப்பித்தனின் பெயரில் விருது ஒன்றை ஏற்படுத்தி, நவீனத் தமிழ் இலக்கியத்திற்கு பங்காற்றிய எழுத்தாளர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் விருதுகள் வழங்கி வருகிறது. முதல் விருது 1996 ஆம் ஆண்டு எழுத்தாளரும், "எழுத்து" என்கிற தனது இலக்கியப் பத்திரிகையின் மூலம் புதுக்கவிதை இயக்கத்தை வளர்த்தெடுத்தவருமான திரு. சி. சு. செல்லப்பா அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் பத்தாயிரம் ரூபாயாக இருந்த விருதுத் தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு கடந்த பத்தாண்டுகளாக இந்திய அரசின் சாகித்ய அகாதமி விருதுக்கு இணையாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. 2016 ஆண்டு முதல் புனைவிலக்கியத்திற்கு ஒரு விருதும், புனைவிலிப் படைப்புகளுக்கு ஒரு விருதுமாக ஆண்டிற்கு இரண்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 36 எழுத்தாளர்களுக்கு விளக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. விளக்கு விருது தற்போது தமிழ் இலக்கிய உலகின் அங்கீகாரத்தையும், வாசகர்களின் பரவலான கவனத்தையும் பெற்ற கௌரவம் மிக்க விருதாகத் திகழ்கிறது. ஒவ்வோர் ஆண்டும் அக்டோபரில் வெளியிடப்படும் விளக்கு விருதுகளின் அறிவிப்பை தமிழ் இலக்கிய உலகம் ஆவலுடன் எதிர்நோக்குகிறது.

விளக்கு அமைப்பின் நோக்கங்களைச் செயற்படுத்த பேரவையின் மேனாள் தலைவர் (1995) நா. கோபால்சாமி (மேரிலாந்து) அவர்களைத் தலைவராகவும், 'திண்ணை' இணைய இதழின் ஆசிரியர் கோ. இராஜாராம் (கனெக்டிகட்) அவர்களைத் துணைத் தலைவராகவும், இக்கட்டுரையின் ஆசிரியர் மு. சுந்தரமூர்த்தியை (டென்னிசி) செயலாளராகவும், பேரவையுடன் தொடர்புடைய சொ. சங்கரபாண்டி (மேரிலாந்து), பி.கு. சிவகுமார் (நியூ ஜெர்சி), செ. வெள்ளைச்சாமி (மிச்சிகன்) ஆகியோரைச் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு செயற்குழுவும், விருதாளர்களைப் பரிந்துரைக்க மூன்று எழுத்தாளர்களைக் கொண்ட ஒரு நடுவர் குழுவும் செயற்படுகின்றன. தற்போதைய நடுவர் குழுவில் எழுத்தாளர் சி. மோகன், ஆய்வாளர் முனைவர் வ. கீதா, மொழிபெயர்ப்பாளர் இரா. சண்முகசுந்தரம் ஆகிய மூவரும் உறுப்பினர்களாக உள்ளனர். நடுவர் குழு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைக்கப்படுகிறது. அ. வெற்றிவேல் (மதுரை), 'வெளி' ரங்கராஜன் (சென்னை) ஆகிய இருவரும் அமைப்பின் தமிழக ஒருங்கிணைப்பாளர்களாக செயல்படுகின்றனர்.

உறுப்பினர்கள் செலுத்தும் உறுப்பினர் தொகையின் மூலம் விளக்கு விருதுகள் அளிக்கப்படுகின்றன. ஆண்டு உறுப்பினர் தொகை $150 அமெரிக்க டாலர்கள். உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்குமுகமாக விருது பெறும் எழுத்தாளர்கள் கையெழுத்திட்ட அவர்களின் இரண்டு முக்கியமான நூல்கள் அனுப்பபடுகின்றன. பேரவையுடன் தொடர்புள்ள பல நண்பர்கள் விளக்கு அமைப்பிற்கு தொடர்ந்து ஆதரவை நல்கி வருகிறார்கள்.

மேலும், கடந்த சில ஆண்டுகளாக வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், பிரபா பாலா மற்றும் பாலா சுவாமிநாதன் குடும்ப அறக்கட்டளையும், இவ்வாண்டு முதல் மருத்துவர் விஜய் ஜானகிராமன் குடும்பமும் நல்கைகள் அளித்து விளக்கு அமைப்பிற்குப் பேருதவி புரிந்து வருகின்றனர்.

இவ்வாண்டின் விருதுக்குரியவர்களாக எழுத்தாளர் விட்டல் ராவ் (புனைவிலக்கியம்), மொழிபெயர்ப்பாளர் வைதேகி ஹெர்பர்ட் (புனைவிலி எழுத்துகள்) ஆகிய இருவரும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இவ்வாண்டின் விருதுகள் வழங்கும் விழா வரும் ஜனவரி 18 சனிக்கிழமை மாலை 5:30 மணிக்கு சென்னை சிஐடி காலனியில் உள்ள கவிக்கோ அரங்கில் நடைபெறவுள்ளது. அவ்வமயம் சென்னையில் இருக்கும் பேரவை நண்பர்கள் விழாவில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இக்கட்டுரையின் வாயிலாக பேரவை நண்பர்களை விளக்கு உறுப்பினர்களாக இணையுமாறு வேண்டிக்கொள்கிறேன். விளக்கு அமைப்பின் உறுப்பினராக இதைப் பற்றிய விவரங்களை *www.vilakku.org* என்ற வலைதளத்தில் காணலாம். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள்: *615-429-2013* அல்லது *301-915-4792;*

முகவரி:
Vilakku Literary Society, Inc.,
c/o N. Gopalaswamy,
11205 Green Watch Way,
North Potomac, MD 20878

வாழ்த்துகள்



அட்டைப்பட ஓவியங்கள் தந்த நம்ம ஊர் ஓவியர்கள்

ரிஷிகா பிரதாப்
டிராய் தமிழ்ப் பள்ளி
மிச்சிகன் தமிழ்ச்சங்கம்

மஞ்சரி ரவிக்குமார்
மிச்சிகன் தமிழ்ச்சங்கம்



"தமிழுக்கு ஏன் பெண் வடிவம்"

–அருண்பிரசாத்

தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் பிறந்த அருண்பிரசாத், ஒரு சிறிய புத்தகக் கடையின் உரிமையாளரின் மகன் ஆவார். தந்தை நடராஜன் தாயார் ருக்மணி அவர்களுக்கு மூத்த மகனாக பிறந்தார். பள்ளி மற்றும் கல்லூரி படிப்பை முடித்த பிறகு மும்பையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் மென்பொருள் தொழில்நுட்பம் துறையில் பணியாற்றி வருகிறார்.

நூல் ஆசிரியர்:

தமிழ் மீதும் வரலாற்றின் மீதும் உள்ள ஆர்வம் காரணத்தினால் SundayDisturbers யூடியூப் சேனல் ஒன்று உருவாக்கி அதில் பல விடயங்கள் தமிழ் மொழியை பற்றியும் தமிழ் வரலாற்றை பற்றியும் பதிவு செய்தார். பின்னர் "தமிழுக்கு ஏன் பெண் வடிவம்" என்ற ஒரு நூலை எழுதி வெளியிட்டு ஒரு நூல் எழுத்தாளராக விளங்கினார்.

ஆய்வாளர்:

ஒரிசா பாலு அய்யாவின் குழுவில் இணைந்து ஆய்வுகளிலும் ஆராய்ச்சிகளிலும் இணைந்தார். ஒரிசா பாலுவின் வழிகாட்டலின் படி மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள தமிழர்களின் தொடர்பு என்ற ஆய்வு செய்தார். தனது SundayDisturbers யூடியூப் குழுவை வைத்து தைவான் பழங்குடி மக்களான காவலன் பழங்குடி மக்களுக்கும் தமிழர்களுக்கும் இருக்கும் ஒற்றுமை பற்றி ஆய்வு செய்தார்.

கதையாசிரியர்:

அடுத்த கட்டமாக வரலாற்று நிகழ்வுகளை கொண்டு பல கதைகளை படைத்தார். அவர் படைத்த பொன்னியின் செல்வன் 2.0 முதல் 8.0 வரை மக்களின் பெரும் ஆதரவை பெற்றது. மேலும் சொக்கநாதன் கதைகள், ராவண வீணை போன்ற கதைகள் அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது.

பதிப்பகம்:

யாழ்ப்பாணம் நூலகம் எரிந்த நினைவு நாள் அன்று, 2022 ஆம் ஆண்டு அதே நாள் SundayDisturbers என்ற நூல் பதிப்பகம் தொடங்கினார். இப்போது வரை Marvel of Madras, சங்க கால பூக்கள், கடல் கடந்த தமிழர்கள் என்ற மூன்று நூல்களை வெளியிட்டு உள்ளார்.

கல்வெட்டு பயிற்சி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தி தமிழி எழுத்துகளை சுமார் 10000 மேல் நபர்களுக்கு வகுப்பு எடுத்தார். ராஜ ராஜ சோழன் காலத்தில் பயன்பாட்டில் இருந்த தமிழ் கல்வெட்டு எழுத்துகளை சுமார் 5000 மேல் நபர்களுக்கு வகுப்பு எடுத்தார்.

வரலாற்று பயணங்கள்:

கடந்த இரண்டு வருடங்களாக மக்களை நேரடியாக வரலாற்று இடங்களுக்கு கூட்டி சென்று அந்த வரலாற்றையும் அதன் சிறப்பையும் கூறி வருகிறார். இதுவரை 45 வரலாற்று பயணங்களை வெற்றிகரமாக முடித்து உள்ளார். இதில் 1750-க்கும் நபர்களுக்கு பங்கேற்று வருகிறார்.

பயணம் தொடரும்...

“உரக்கக் கூறுவோம் இவ்வுலகிற்கு தமிழர்களின் பெருமையை!!!

அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம்

"கற்கின்ற சுவடிகளில், செய்தித் தாளில்,
விண்டுரைக்கா அறிவியலில், கலையில் எல்லாம்
விதைத்திடுதல் வேண்டும் தமிழ் வாழும் அன்றே!
–பாவலரேறு பெருஞ்சித்திரனார்

அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம் இந்த ஆண்டு பல்வேறு நிகழ்ச்சிகளை செவ்வனே நடத்தியது.

முத்தமிழைக் கொண்டாடும் வகையில் நடைபெற்ற முத்தமிழ் விழா செப்டம்பர் 14ஆம் நாள் நடைபெற்றது. இதில் இயல் இசை நாடகம் என்ற பிரிவுகளில் நடந்த பல்வேறு போட்டிகளில் சிறுவர்களும் பெரியவர்களும் கலந்து கொண்டனர். மொத்தம் 232 பங்கேற்பாளர்கள் பல்வேறு வயது பிரிவுகளில் 672 போட்டிகளில் பங்கேற்றனர். போட்டிகளுக்குப் பிறகு நடைபெற்ற விழாவில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் அமெரிக்கன் பாப்பையா என்று அழைக்கப்படும் திருமிகு அகத்தியன் ஜான் பெனடிக்ட் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். மேலும் அவர் "தமிழோடு விளையாடு" என்கிற சிறப்பு நிகழ்ச்சியை நடத்தினார்.

தமிழ்ச் சங்கத்தின் விளையாட்டுக் குழு நடத்திய இறகுப்பந்து போட்டிகள் ஆகஸ்ட் 3 ஆம் நாளும், கைப்பந்து போட்டிகள் செப்டம்பர் 7 ஆம் நாளும் நடைபெற்றன. வலைப்பந்து போட்டிகளின் முதல் சுற்று போட்டிகள் ஆகஸ்ட் 4 ஆம் தேதி தொடங்கி, செப்டம்பர் 15 ஆம் தேதி இறுதிப் போட்டியுடன் நிறைவு பெற்றது. இந்தப் போட்டிகளில் சிறுவர், சிறுமியர்கள், ஆண்கள், பெண்கள் என்று பல்வேறு பிரிவுகளில், வீரர்கள் பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

நூறு நிகழ்வுகளை கடந்து, ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் 'தமிழே அமுதே' நிகழ்ச்சி 2024ஆம் ஆண்டில், கவிஞர். நா. முத்துநிலவன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சிறப்பு அமர்வில் தொடங்கி தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

இதுவரை 106 வாரங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம் நடத்தும் 2024ஆம் ஆண்டின் மாபெரும் விழாவான தீபாவளி விழா அக்டோபர் 27ஆம் தேதி நடைபெற்றது. இதில் புகழ்பெற்ற இசைக்கலைஞர்களான மக்களிசை மன்னன் Dr. C. செந்தில் கணேஷ், மக்கள் செல்வி J. ராஜலெட்சுமி மற்றும் குழுவினரின் மண் மணம் மாறா

மக்களிசை நிகழ்ச்சி நடைபெற்றது ஒரு தனிச்சிறப்பு.

அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்க குருதிக் கொடை முகாம்-அக்டோபர் 12, 2024 "உயிரைப் பாதுகாக்கப் பயன்படும் குருதியை விட விலையுயர்ந்த பரிசை இந்த உலகில் நாம் ஒருவருக்கு வழங்கிட முடியாது."

நமது தமிழ்ச் சங்கத்தின் தொண்டுக் குழு, லைஃப்சௌத் (LIFESOUTH) நிறுவனத்துடன் கூட்டணி அமைத்து குருதிக் கொடை முகாமொன்றை, அக்டோபர் 12, 2024 (சனிக்கிழமை) அன்று 12 மணியிலிருந்து 5 மணி வரை சட்டஹூச்சீ பாய்ண்ட் பூங்காவில் நடத்தியது. லைஃப்சௌத் நிறுவனம் ஜார்ஜியாவில் 100க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளுக்குக் குருதி வழங்கி வரும் வருவாய் நோக்கமில்லா குருதி வங்கி என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் மொத்தம் 14 பேர் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக ஆண்டு முழுவதும் தன்னலம் பாராமல் சங்கத்தின் நலனுக்காக தன்னார்வத் தொன்டாற்றியத் தன்னார்வலர்களுக்கு நன்றி நவிலல் விழா நவம்பர் 23ஆம் தேதி இனிதே நடைபெற்றது. தன்னார்வலர்களுக்குக் கேடயம் வழங்கிய அவர்களை சங்கத்தின் சார்பாகச் சிறப்பித்தோம்.

"தமிழால் சிறப்போம்! அன்பை வளர்ப்போம்!"

சின்சினாட்டி மாநகரத் தமிழ்ச்சங்கம்

சின்சினாட்டி மாநகரத் தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினர்களின் கலைக்குழு சிங்சிவேங்கை பல கலைப்பெருவிழாக்களில் ஆதித் தமிழரின் முதல் இசைக்கருவியம் பறையின் பெருமையை பறை சாற்றி னார். ஆவணித்திங்களின் இறுதியில் உலகப்பறை விழாவில் இணைந்தனர்!

உலகின் பல்வகை இசைக்கருவிகளின்

அணிவிழாவில் மிளிர்ந்தனர்!

மத்தளங்கள், கைமுரசு, உருளைகள் எனப்

பல தேசம் அடி துவங்க

இந்தியத் தோலிசைக் கருவி கொண்டு

வான் அதிர தமிழ் பறை முழங்க

ஆங்கில இசையும் தமிழில் "ராப்" இசைத்தனர்.

தொடர்ந்து கண்சிமிட்டு (BLINK) நிகழ்வுதன்னில் பறையடித்து கொம்பு முழங்கி களித்தனர். கிம்மியுடன் சிலம்பம் கலந்துகட்டி சின்சினாட்டி மாநகரில் தமிழர் கலைகளை உயர்வாக்கினர்.

கிறிஸ்துமஸ் ஒளிவிழாவிலும் இந்தியக் கலைக்குழுவுடன் தமிழ் சங்கீதங்கள் பறையில் மொழிந்தனர்.

ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச்சங்கம்

திரு. கோபாலகிருஷ்ணன் ஐயா, திரு.மலர்ச்செல்வன் ஐயா, திரு. மாணிக்கம் ஐயா ஆகிய மூன்று பேரின் முயற்சியால் ஏழு வருடம் கடந்து, எட்டாக் கனி என்றவர் மத்தியில், தொட்டுவிட்டது எட்டாவது ஆண்டை வெற்றிகரமாக நமது ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச்சங்கம். கடந்த செப்டம்பர் மாதம் 2024ல் புதிய குழு அமைத்தது. இந்தக் குழுவில் செயலாளராக திரு. முத்துராஜு சங்கு, பொருளாளராக திரு. குமார் நடராசன் மற்றும் தகவல், கலை இயக்குனராக திரு. ராஜராஜ சோழன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதல் நிகழ்ச்சியாக, தமிழ் மொழியின் பெருமையை உணர, அக்டோபர் மாதத்தில் 12-ம் தேதியில். 'கவிதையெனும் மொழி' என்னும் தலைப்பில் முனைவர் திரு. வேல்முருகன் (தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகம்) அவர்கள் இணைய வாயிலாக சிறப்புரை ஆற்றினார். இது நம் மொழியின் பெருமையை அறிய நல்ல வாய்ப்பாக அமைந்தது. அடுத்து தமிழிசையை அறிய, மக்களிசை மன்னன் திரு. செந்தில்குமார் மற்றும் திருமதி. ராஜலட்சுமி அவர்களின் நாட்டுப்புறப் பாட்டு நிகழ்ச்சி அக்டோபர் மாதம் 13-ம் தேதி நடைபெற்றது. பின்னர் தமிழ் இலக்கியம் கற்க, திருவள்ளுவனைப் பெருமைப்படுத்தும் வகையில் வருடந்தோறும் திரு.மாரிமுத்து நடராஜன் அவர்களின் தலைமையில் பெரியவர்களுக்கான 'திருக்குறள் திருவிளையாடல்' என்னும் போட்டி நிகழ்ச்சி நவம்பர், 9 தேதியில் சிறப்பாக நடைபெற்றது. உட்லேண்ட்ஸ் பகுதியைச் சார்ந்த 'தீயா வேலை செய்யணும் கைப்புள்ள' என்ற அணி முதலிடம் பெற்று சுழற்கோப்பையை வென்றது. மொழி, இசை மற்றும் இலக்கியம் உணர்ந்த பின், தமிழர் வாழ்வியல் அமெரிக்க மண்ணில் எப்படி என்பதனை எடுத்துரைக்க விஜய் தொலைக்காட்சி புகழ் திரு. கோபிநாத் அவர்களின் தலைமையில் 'புலம்பெயர்ந்த வாழ்வில் யாருக்குச் சுமை அதிகம்? முதல் தலைமுறைக்கா அல்லது இரண்டாம் தலைமுறைக்கா?' என்ற தலைப்பில் விவாத மேடை டிசம்பர் மாதத்தில் 8-ம்தேதி நடைபெற்றது. மண்ணின் மணம் மாறாமல் மக்களின் மனம் நோகாமல் விழாக்கள் எடுத்துச்செல்கிறது எங்கள் ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச்சங்கம். வாழ்க தமிழ்!! வளர்க தமிழினம்!!!

மில்வாக்கி மாநகரத் தமிழ்ச்சங்கம்

மில்வாக்கி மாநகரத் தமிழ்ச்சங்கத்தின் கோடை சுற்றுலா *Sussex village Park*-ல் ஆகஸ்ட் மாதம் 18, 2024 நடைபெற்றது. சுமார் 100 குடும்பங்களுக்கு மேல் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் சுடச் சுட பரோட்டாவுடன் சுவையான உணவு வகைகள் பரிமாறப்பட்டன. பெரியவர்களும், குழந்தைகளும் பல விளையாட்டுப் போட்டிகளில் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

Adopt-A-Highway: ஆண்டுதோறும் நமது சங்கத்தினரால் பீவாக்கீ நெடுஞ்சாலை 3 முறை சுத்தம் தூய்மை செய்யப்படும். இந்த ஆண்டும் செப்டம்பர் 21, 2024ம் தேதியுடன் 3 முறை சுத்தம் செய்யப்பட்டது.

சூலை மாதத்தில் பேரவை விழாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்கள் விவரம் : 1. பிரணவ் செந்தில்முருகன் - *Classical Singing solo First prize*, 2. திருமதி. நளினி சுந்தரராஜன் - சிறப்பு கவிரங்கம் மற்றும் இலக்கிய விநாடி வினா.

மில்வாக்கி மாநகர தமிழ்ச்சங்கம் சார்பாக குழந்தைகள் தினம் அக்டோபர் 5, 2024 அன்று கொண்டாடப்பட்டது. 45-க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் மாறுவேட கண்காட்சி, யோகா மற்றும் செடி வளர்ப்பு பற்றிய பயிற்சி பட்டறை நடைபெற்றது. நவம்பர் 17, 2024, அன்று GMTS-ன் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. GMTS குழு உறுப்பினர்கள் மற்றும் பொது உறுப்பினர்கள் கலந்து கொண்டு இந்த ஆண்டுக்கான நிகழ்ச்சிகள் பற்றியும் நிதி நிர்வாகம் பற்றியும் ஆலோசித்தனர். ■

மிச்சிகன் தமிழ்ச்சங்கம்

மிச்சிகன் தமிழ்ச்சங்கத்திற்கு இது பொன்விழா ஆண்டு! இந்த ஆண்டு சூலைமாதம் பொறுப்பேற்ற செயற்குழு, ஒவ்வொரு மாதமும் ஒரு நிகழ்வாவது நடத்த வேண்டும் என்று முன்னெடுப்புடன் செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டு இதுவரை நடத்திய நிகழ்வுகளை இங்கே தொகுத்திருக்கின்றோம்.

ஆகத்து மாத நிகழ்வுகள்:

ஆக 11 - முதல் நிகழ்வாகக் கோடைகொண்டாட்டம் நடைபெற்றது. பெருந்திரளாக மக்கள் கலந்து சிறப்பித்த இந்த கோடைவிழா பல்கூட்டு உணவு, இசை, விளையாட்டு என களைக்கட்டியது. சகோதரி ஜோதிகலை அவர்களின் இசைநிகழ்ச்சி நடைபெற்றது கூடுதல் சிறப்பாக அமைந்தது.

ஆக 29 - புலம் பெயர்ந்தோர்கள் சந்திக்கும் குடியேற்றச் சட்டச் சவால்கள் குறித்து ஒரு விழிப்புணர்வு நிகழ்வாக குடியேற்றங்களுக்கான வழக்கறிஞர் மதிப்பிற்குறிய திருமதி.கவிதா ராமசாமி அவர்களுடன் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி இணைய வழியில் நடந்தேறியது. தற்போதைய சட்டச் சவால்களைப் பற்றியும் அவைகளை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்பது பற்றியும் சிறப்பாக எடுத்துக்கூறிய கவிதா அவர்கள், பொதுமக்களின் கேள்விகளுக்கும் திறம்பட பதில் கூறி நிகழ்ச்சியை பலனுள்ளதாக ஆக்கினார்.

செப்டம்பர் மாத நிகழ்வுகள்:

செப் 7 - சிகாகோ மாநகரில் ரோஸ்மொண்ட் அரங்கத்தில் அயலகத் தமிழர் நலவாரியம் சார்பில் நடந்த “வணக்கம் அமெரிக்கா” என்ற நிகழ்ச்சியில் மிச்சிகன் தமிழ்ச்சங்கத்தின் பொன்விழா ஆண்டு கொண்டாட்டத்தைக் குறிக்கும் வகையில் ஒரு சிறப்பு இலச்சினை, தமிழக முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்டது.

செப் 24 - மிச்சிகன் தமிழ்ச்சங்கத்தின் பொன்விழா செயற்குழு சார்பில் மற்றுமோர் முக்கிய நிகழ்ச்சி, இந்தியாவின் நிலவு மனிதர், அய்யா மயில்சாமி அண்ணாதுரை அவர்களுடனான கலந்துரையாடல். வேறு அலுவல் காரணமாக அமெரிக்கா வந்த அவரை,

மிச்சிகன் தமிழ்ச்சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க கலந்துரையாடலில் கலந்து கொண்டார். முதலில் ஒரு சிறிய உரைநிகழ்த்தி விட்டு பின்னர், சிறியவர் முதல் பெரியவர் வரைகேட்ட பலதரப்பட்ட கேள்விகளுக்கு சிறப்பாக பதிலளித்தார். மிச்சிகன் தமிழ்ச்சங்கம் சார்பில் இது வரை இது போல ஒரு நிகழ்வு நடந்ததில்லை என்று பெருமையோடு நிகழ்ச்சி முடிந்தது.

அக்டோபர் மாத நிகழ்வுகள்:

அக் 20 - மிச்சிகன் தமிழ்ச்சங்கத்தின் பொன்விழா தீபாவளித் திருநாள் கொண்டாட்டம் அன்று நடைபெற்றது. பல்சுவைவிருந்து, குழந்தைகள் முதல் பெரியவர்களின் கலை நிகழ்ச்சிகள் என சிறப்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் பொன்விழா துவக்கவிழாவும், முன்னாள் தலைவர்களை சிறப்பிக்கும் நிகழ்வும் நடந்தது. முத்தாய்ப்பாக சன் தொலைக்காட்சி கல்யாண மாலைப் புகழ் பேச்சாளர்கள் மிச்சிகன் வாழ் இளம் பேச்சாளர்களுடன் இணைந்து வழங்கிய சிறப்புப் பேச்சரங்கம் நிகழ்ச்சியுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

நவம்பர் மாத நிகழ்வுகள்:

மிச்சிகன் தமிழ்ச்சங்கம் நவம்பர் மாதத்தை குழந்தைகளுக்கான மாதமாக அறிவித்து குழந்தைகளுக்கு சிறப்பு நிகழ்ச்சிகளைநடத்தியது

நவ 10 - முதல் நிகழ்ச்சியாகக் குழந்தைகளுக்கான சதுரங்கப் போட்டியை நடத்தியது. இரண்டாம் வகுப்பு வரையிலான குழந்தைகள், மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான குழந்தைகள், ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலான குழந்தைகள் என மூன்று பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்துகொண்ட இந்த போட்டியின் முடிவில் மிச்சிகன் ஆளுநரால் நியமிக்கப்பட MAAPAC ஆணையர் திருமதி. அனு கோபாலகிருஷ்ணன் வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

நவ 24 - இரண்டாவது நிகழ்ச்சியாகக் குழந்தை களுக்குப் பேச்சுப் போட்டியை நடத்தியது. சமூக மாற்றத்திற்கு வித்திட்ட ஆளுமைகளான பாரதியார், காமராசர், பெரியார்,வ. உ. சி, மருத்துவர் முத்துலட்சுமி அம்மையார் குறித்த தலைப்புகளில் குழந்தைகள் பேசினர். இணைய வழியில் நடந்த இந்த போட்டியில் சிறப்பு விருந்தினராக பன்முகத் திறமையாளர் திரு. ஈரோடு மகேஷ் அவர்கள் கலந்து கொண்டு குழந்தைகளின் பேச்சுகளை கேட்டு மகிழ்ந்து பாராட்டினார்.

■

Volume 1 | Edition 10 12.05.2024

மினசோட்டாத் தமிழ்ச் சங்கம்

COMMUNITY AWARENESS MONTHLY NEWSLETTER 2024

Sensory Friendly events near you - Dec'24

- DEC 7 - NET SPORTS - CHASKA PARK & CREATION
- DEC 8 - SENSORY FRIENDLY SUNDAY AT THE WALKER ART CENTER
- DEC 21 - SENSORY FRIENDLY SATURDAY, BELL MUSEUM
- DEC 04-24 - PHOTOS WITH SANTA - SENSORY FRIENDLY EVENT - CRSSROADS CENTER & SOUTHDATE CENTER
- SPECIAL ADMISSION
  - CHEAP SKATE-1ST TUESDAY OF EACH MONTH
  - SCIENCE MUSEUM-1ST SUNDAY OF EACH MONTH
  - CHUCK E. CHEESE - EVERY SUNDAYS
  - STAGES THEATRE COMPANY - EVERY SATURDAY MORNING SHOW
- EVERY MONTH - NAVIGATING MSP POM - ONLY SPECIAL NEEDS INDIVIDUALS/FAMILIES WHO PLAN TO FLY IN THE NEAR FUTURE. REGISTRATION REQUIRED. VISIT - MSPAIRPORT.COM/NAVIGATING
- SPECIAL OLYMPICS FOR YOUNG ATHLETES - AGE 2-7 - LAKEVILLE COMMUNITY ED.

Special Olympics Minnesota - winter sports

Current season: POLY HOCKEY

For more information, please reach out to us through the below email, and will connect you with the resources.

neurodiversity@minnesotatamilsangam.org

மினசோட்டா தமிழ்ச்சங்கம்

மினசோட்டாத் தமிழ்ச்சங்கம் ஒவ்வொரு ஆண்டும் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் கலந்து கொள்ளும் வகையில் மாநில சதுரங்கப் போட்டியை சிறப்பாக நடத்தி வருகிறது. தொடர்ந்து ஒன்பதாவது ஆண்டாக இந்த ஆண்டும் மாநில சதுரங்கப் போட்டி கடந்த நவம்பர் 10 ஆம் திகதி அன்று நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்டோர் இப்போட்டியில் கலந்துகொண்டது இந்த ஆண்டின் தனிச்சிறப்பு.

திரு. ஜேம்ஸ் டைட்டஸ் (வேசாட்டா உயர்நிலைப் பள்ளி சதுரங்க சங்க இயக்குனர்) அவர்கள் நடுவராக இருந்து போட்டியை சிறப்பாக நடத்திக் கொடுத்தார். செல்வி சௌமியா சுப்ரமணியம் மற்றும் செல்வன் சூர்யா சுப்ரமணியம் நடுவருக்கு உறுதுணையாக இருந்து போட்டி எளிதே நடக்க உதவினர்.

இந்த மாநில சதுரங்கப் போட்டியை திருமதி. பிரியா கிருஷ்ணன் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒருங்கிணைத்து சக செயற்குழுவினரின் உதவியோடு செம்மையாக நடத்தி வருகிறார். மக்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு, தங்கள் மேலான ஆதரவையும் பாராட்டுகளையும் மகிழ்வுடன் வழங்கி வருகின்றனர்.

"Adopt A Highway " - நெடுஞ்சாலை சுத்திகரிப்பு

நெடுஞ்சாலையின் ஒரு பகுதியை பொறுப்பேற்று சுத்தம் செய்யும் தன்னார்வத் தொண்டை மின சோட்டாத் தமிழ்ச்சங்கம் ஆகஸ்ட் 2022 ஆம் ஆண்டு முதல் முன்னெடுத்து நடத்தி வருகிறது. இரண்டாண்டுகள் தொடர்ந்து நாங்கள் செய்த இந்தச் சேவையை அங்கீகரிக்கும் வகையில், மின்னசோட்டா மாகாணத்தின் டகோடா கவுண்டியின் நெடுஞ்சாலையில் எங்கள் சங்கத்தின் பெயர் கொண்ட பதாகையை ஜூன் 11, 2023 அன்றே வைத்தது டகோடா கவுண்டி.

எங்கள் சங்கத்தின் பொருளாளர் திரு. ராம் சின்னதுரை அவர்கள் முன்னெடுத்து நடத்தி வரும் தொண்டில், பல தன்னார்வலர்கள் ஆர்வத்துடன் இணைந்து வெற்றிகரமாகத் தொடர்ந்து செய்து வருகிறார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

Neuro Diversity - சிந்தைப் பன்மயம்

சிந்தைப்பன்மயத்திற்க்கு ஆதரவு தரும் வகையிலும், அவர்களை ஊக்கு விக்கும் விதமாவும், இதற்கான விழிப்புணர்வை சங்கம் பல வகையில் செய்துவருகிறது. இந்த வகையில் சிறப்பு ஒலிம்பிஸ் போட்டிகளில் நமது குழந்தைகளும் நண்பர்களும் பங்குபெற ஏதுவாக இருக்கும் நிகழ்வுகளை தொகுத்து செய்திமடல் ஒன்றை மார்ச் மாதம் முதல் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. இந்த மாதம் தனது பாத்தாவது பதிப்பை வெளியிட்டது .

இந்தச் செய்தி மடலை பொருளாளர் திரு.ராம் அவர்கள் முன்னெடுத்து தொடர்ந்து செய்து வருகிறார்கள். இதனால் பலரும் பயன்பெற்று வருகிறார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம். ■

பேரவை விழா 2025, தன்னார்வலர்கள் கூட்டத் துவக்கவிழா
தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம்

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 2025ஆம் ஆண்டிற்கான அமெரிக்கத் தமிழ்விழா, வட கரொலைனா மாகாணம் ராலே நகரில் சூலை 3, 4 & 5 2025 ஆகிய நாட்களில் நிகழவுள்ளது நாமனைவரும் அறிந்ததே. விழாவிற்கான தன்னார்வலர்களின் எழுச்சிமிகு துவக்கக் கூட்டம் டிசம்பர் 7, 2024அன்று, ஆல்ஸ்டன் ரிட்ஜ் இடைநிலைப் பள்ளியில் காலை பத்து மணிக்குத் துவங்கியது. கூட்டத்தினை கேரொலைனா தமிழ்ச்சங்க செயற்குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

தமிழ்த்தாய் வாழ்த்தினை அடுத்து, தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் ஆனந்த் செல்வராஜ் வரவேற்றுப் பேசினார். வரவேற்புரையைத் தொடர்ந்து பேரவைத் தலைவர் விஜய் மணிவேல் அவர்கள், விழா ஒருங்கிணைப்பாளர்களான மீனா இளஞ்செயன், பாரதி முருகேசன், தொழில்முனைவோர் மாநாட்டின் ஒருங்கிணைப்பாளரும் தமிழ்ச்சங்கத் தலைவரும் பேரவை நிர்வாகக் குழு உறுப்பினருமான முனைவர் பாரதி பாண்டி, இணை ஒருங்கிணைப்பாளர்கள் முதலானோரை அறிமுகப்படுத்தியும் பேரவைவிழா குறித்தும் பேசினார். பேரவைத் துணைத்தலைவர் எழிலன் இராமராஜன் அவர்கள் விழா ஏற்பாடுகள், நிதிதிரட்டல் குறித்து விளக்கமளித்துப் பேசினார். ஒருங்கிணைப்பாளர்கள், குழுக்களை அறிமுகப்படுத்திப் பேசினர். வினா விடை நேரத்தில் பேரவைத் தலைவர், துணைத்தலைவர் விளக்கமளித்தும் பேசினர்.

கூட்டத்தின் சிறப்பு விருந்திநர்களாகக் கலந்து கொண்ட இராலேநகர் மேயர் அவர்களும் உள்ளூர்க் காங்கிரசுமேன் அவர்கள் சார்பாகக் கலந்து கொண்ட அவரது பேராளர் அவர்களும் தன்னார்வலர்களைப் பாராட்டியும் விழாசிறக்க வாழ்த்தியும் உரையாற்றினர்.

பேரவையின் முன்னாள் தலைவர்கள் முனைவர் தணிகுமார் சேரன், மருத்துவர் சோம.இளங்கோவன் ஆகியோரைத் தொடர்ந்து தமிழார்வலர்கள் ஏராளமானோர் தத்தம் பங்களிப்புக்கான ஏற்புகளை அறிவித்துக் கொண்டனர். கொடைதிரட்டல் பணிகளை முனைவர் பாரதி பாண்டி கலகலப்புடன் ஊக்கமூட்டி முன்னெடுத்துச் சென்றார். ஆவலுடன் வருகையளித்திருந்த அனைவரும் பங்கேற்றபடி இருந்தனர். சிறப்பு விருந்திநர்கள், கலந்து கொண்ட தன்னார்வலர்கள் 275+ பேர் என அனைவருக்கும், பொருளாளர் சண்முகம் பச்சமுத்து அவர்கள் நன்றி நவில்ந்தும் பாராட்டுகளை உரித்தாக்கியும் பேசினார். நல்லதொரு பிற்பகல் உணவு பரிமாறப்பட்டது. உண்டாட்டு வேளையின் போது வருகை தந்திருந்தோர் மத்தியில் இடம் பெற்ற ஆவல்மிகு அளவளாவல்கள், விழாவுக்கான எதிர்பார்ப்புகளைக் கூட்டி அந்நாள் விரைவிலேயே வந்துவிடக் கூடாதாயெனும் மனநிலையை வெளிக்காட்டுவதாக இருந்தன.

தகவற்தொடர்புக்குழு, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.

கனவு நினைவாக வேண்டும்!

குரு அரவிந்தன்

ரொறன்ரோ, (முன்னாள் தலைவரும் தற்போது காப்பாளரும்)
ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், மிசசாகா தமிழ் குடும்பமன்றம்.

பள்ளிப் பையை ஹாலில் போட்டுவிட்டு பால்கனி குழாயில் கால்கழுவச் சென்ற பாத்திமா மொட்டைமாடித் தண்ணீர்த் தொட்டிக்குப் பக்கத்தில் ஒரு வட்டவடிவமான குட்டிவிமானம் வந்து நிற்பதைப் பார்த்துத் திடுக்கிட்டாள். அந்த விமானம் சத்தமில்லாது வந்து இறங்கியது அவளுக்குப் புதுமையாக இருந்தது. விமானத்தின் சிறிய கதவு ஒன்று திறக்க ஏணிப்படி ஒன்று கீழே இறங்கியது. ஒருவர் பின் ஒருவராக இரண்டு சிறிய உருவங்கள் ஏணிப்படி வழியாக கீழே இறங்குவதைக் கண்ட பாத்திமா பீதியடைந்து சுவருக்குப் பின்னால் மறைந்திருந்து அவர்களை அவதானித்தாள்.

ஓடிப்போய்விடுவோம் என்று நினைத்துக் கொண்டு நின்றபோது அவர்கள் அவளை நோக்கி வந்தார்கள். அவர்களது உருவத்தைப் பார்த்தால் இப்போது தான் நடைபயிலும் அவளது தம்பிப் பாப்பா போல இருந்தது. தலையிலே மட்டும் கொம்பு போல இரண்டு சிறிய உணரிகள் 'ஆண்டெனா' போல அவர்களின் நடையின் வேகத்திற்கேற்ப ஆடிக்கொண்டிருந்தன.

அதைப் பார்த்ததும் அவளுக்கு வேடிக்கையாகவும் அதேசமயம் பயமும் பிடித்துக் கொண்டது. டார்ச்லைட் போல ஏதோ ஒன்று அவர்களின் கைகளில் இருந்தன. மெல்லிய ஊதாநிற வெளிச்சம் அதிலிருந்து சிதறியது. ஒருவேளை உயிரினங்களை அது அடையாளம் காட்டுமோ?

அவள் படங்களில் மட்டும்தான் 'ஏலியன்' என்று சொல்லப்படும் வேறு கிரகத்தவர்களைப் பார்த்திருக்கிறாள். இப்போது கண்முன்னால் நிஜமாக அவர்களைப் போல வந்து நின்றதும் செய்வது அறியாது மலைத்துப் போய் நின்றாள்.

அவர்கள் அருகே வந்த போது அவளது உடம்பு நடுங்கியது. அவர்கள் தங்கள் மொழியில் ஏதோ கேட்டார்கள். அவளுக்கு என்னவென்று புரியவில்லை. பயத்தில் விழிபிதுங்க 'அம்மா' என்று அலறினாள்.

உடனே அவர்களில் ஒருவன் அந்தச் சொல்லைத் தனது கருவியிலே பதித்து சில பட்டன்களை அழுத்தி 'அம்மா-தமிழ்' என்று மற்றவனிடம் சொன்னான்.

உடனே அவன் தன்னிடம் இருந்த 'வாக்மென்" போன்ற ஒரு கருவியில் சில மாற்றங்களைச் செய்து பாத்திமாவிடம் நீட்டி காதிலே அதை அணியுமாறு சைகைமூலம் விளங்கப்படுத்தினான்.

பாத்திமா பயத்தில் நடுக்கத்தோடு அதை வாங்கி காதிலே மாட்டிக் கொண்டாள். இப்போது அவர்கள் கதைப்பது தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டு அவளுக்குத் தெளிவாகக் கேட்டது.

'நாங்கள் உனது நண்பர்கள். 'மோனோ' கிரகத்தில் இருந்து நட்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இங்கே வந்திருக்கிறோம். எனது பெயர் 'ஆச்சி', எனது சினேகிதியின் பெயர் 'பூச்சி' என்று அறிமுகப் படுத்தினான்.

பாத்திமாவிற்கு இப்போது பயம் தெளிந்து, பூச்சி ஒரு பெண் என்பதையும், அவர்கள் நல்லவர்கள் போலத் தெரிந்ததால், அவர்களோடு பேசலாம் போலவும் இருந்தது.

உடனே 'எனது பெயர் பாத்திமா' என்று தன்னைத் தானே அறிமுகப்படுத்தினாள். அவள் பேசியது உடனேயே மொழிபெயர்க்கப்பட்டு அவர்களின் மொழியில் அவர்களுக்குக் கேட்டது.

விஞ்ஞானத் துறையிலே அவர்கள் வெகுதூரம் முன்னேறியவர்கள் என்பது மொழிபெயர்க்கும் அந்தச் சிறிய கருவியைப் பார்த்ததும் பாத்திமாவிற்கு விளங்கியது.

அந்தக் கருவி உலகின் முக்கியமான எந்த மொழிக்கும் மாற்றிக் கதைக்கக் கூடிய வகையில் பட்டன்கள் அமைந்திருந்தன. அதைப் பார்த்ததும்,

'இப்படி ஒரு கருவி எல்லோரிடமும் இருந்தால் இந்த உலகில் மொழிப் பிரச்சனையே இருக்காது, இதன் மூலம் ஒருவரின் மொழியை மற்றவர் பேசமுடியும் என்றால், மொழிப்பிரச்சனை, இனத்துவேசம், சண்டை, சச்சரவு என்று எதற்குமே இடமில்லாமல் போய்விடும், இந்த உலகம் எவ்வளவு அழகாக இருக்கும்' என்று பாத்திமா நினைத்தாள்.

அவர்கள் நட்போடு கைகுலுக்கிக் கொண்டார்கள். தம்பிப் பாப்பாவின் கையைப்பிடித்தது போல அவர்களின் கை மிகவும் மென்மையாக இருந்தது.

'உங்கள் கிரகம் எப்படி இருக்கும் என்று பார்க்க ஆசையாக இருக்கிறது. எங்களை அழைத்துச் சென்று காட்டுவீர்களா?' என்றாள் பூச்சி.

அம்மாவிடம் சொல்லாமல் அந்நியர்களான அவர்களோடு எப்படிப்போவது என்று முதலில் தயங்கினாள் பார்த்திமா. ஆனாலும் அவர்களைத் தனியே விட்டுவிட்டுப் போக மனமில்லாமல் அருகே உள்ள பூங்காவிற்கு அழைத்துச் சென்றாள்.

மழைபெய்து தண்ணீர் தேங்கி நிற்கவே அவர்கள் அதற்குள் துள்ளிக் குதித்து விளையாடினார்கள். சிறிது தூரம் நடந்து போக 'லேடிபேர்ட்' டைச் சந்தித்தனர். இவர்களைப் போலவே தலையில் இரண்டு ஆண்டெனாவோடு இருந்த லேடிபேர்ட்டை ஆச்சியும் பூச்சியும் ஆச்சரியமாய்ப் பார்த்தனர்.

இவர்கள் பேசிய மொழியே 'லேடிபேர்ட்டும்' பேசியபோது அவர்கள் திகைத்துப் போனார்கள். லேடிபேர்ட்டிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டு சிறிது தூரம் சென்றதும் யாரோ 'ஹாய்' என்று அழைப்பதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தனர். அங்கே நத்தை ஒன்று ஊர்ந்து கொண்டு வந்தது.

நத்தையின் தலையிலும் இரண்டு ஆண்டெனாக்கள் இருப்பதைக் கண்ட ஆச்சியும் பூச்சியும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

இவர்கள் எங்கள் மொழியையே பேசுகின்றார்கள், ஆதிகாலத்தில் எங்கள் கிரகத்திற்கும் இந்தக் கிரகத்திற்கும் ஏதோ ஒரு தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று பாத்திமாவிடம் சொன்னார்கள்.

அவர்கள் திரும்பிப் போகவேண்டிய நேரம்வரவே ஆச்சியும் பூச்சியும் பாத்திமாவிடம் விடைபெற்று அந்தச்சிறிய வட்டமான விமானத்தில் ஏறினர்.

பாத்திமாவும் கண்கள் கலங்க கையை அசைத்து அவர்களுக்கு 'பாய்' சொல்லி விடைகொடுத்தாள். விமானம் கிளம்பிச் சென்ற பின்பும் அவள் கைகளை ஆட்டியவண்ணம் 'பாய்.....பாய்' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

'ஏய் பாத்திமா என்ன இது 'பாய்........பாய்'" என்று புலம்பிக் கொண்டிருக்கிறாய். தூங்கினது போதும் எழுந்திரு. இன்று விஞ்ஞானப் பரீட்சை அல்லவா?' தாயார் அவளைத் தட்டி எழுப்பி நினைவுபடுத்தினார்.

கண்விழித்துப் பார்த்த பாத்திமாவிற்கு தான் கண்டதெல்லாம் கனவு என்பது புலனாகியது. 'கனவு நினைவாய் இருக்கக் கூடாதா' என்று ஆசைப்பட்டாள்.

பரீட்சையில் முதற் பாகத்தில் கேள்விகள் இலகுவாக இருந்தன. இரண்டாவது பாகத்தில் அதிக புள்ளிகளைக் கொண்ட ஒரு வினா இருந்தது.

'விஞ்ஞான உலகிற்கு உங்களால் அர்ப்பணிக்கக்கூடிய புதிய கண்டுபிடிப்புக்கள்' ஏதாவது ஒன்றைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக என்றிருந்தது.

'எதை எழுதுவது?' பாத்திமா சிந்தித்துப் பார்த்தாள். கனவிலே வந்த ஆச்சியும் பூச்சியும் நினைவிற்கு வந்தனர்.

அவர்கள் கொண்டு வந்த மொழிபெயர்க்கும் கருவி ஞாபகத்திற்கு வரவே அதைப்பற்றி ஒரு கட்டுரை வரைந்தாள். அதனுடைய நன்மை பற்றியும் அதனால் மொழிப்பிரச்சனையை எப்படி இலகுவில் தீர்க்கலாம் என்பது பற்றியும் விரிவாக எழுதினாள்.

அந்தக் கட்டுரையால் அவள் அதிக புள்ளிகள் பெற்று முதற்பரிசு பெற்றதோடு எல்லோராலும் பாராட்டப்பட்டாள்.

இப்போதெல்லாம் மழைக்காலத்தில் 'லேடிபேர்ட்' டையோ அல்லது நத்தையையோ பார்க்கும் போதெல்லாம் பாத்திமாவிற்கு ஆச்சி பூச்சிதான் நினைவில் நிற்கிறார்கள்! என்றாவது ஒருநாள் ஏதாவது ஒரு கிரகத்தில் இருந்து நிஜமாகவே இப்படி யாராவது வரலாம் என்ற நம்பிக்கையோடு அவள் காத்திருக்கிறாள்! அறிவியல் உலகில் நம்பிக்கைகள் வீண்போவதில்லை, என்றாவது ஒரு நாள் நிறைவேறலாம்!

■

சிறார் பகுதி

ஓவியங்கள்



அவ்னிதாஸ்ரீ

வெஸ்டன், புளோரிடா தெற்கு

வாஹிஷ் சங்கர்

Pre-K2, A, மிச்சிகன் தமிழ்ச்சங்கம்



வேல் ஸ்ரேயா சங்கர்ராஜ்

வகுப்பு : Kindergarten பிரிஸ்கோ, டெக்சாஸ்



யதுநந்தன் செந்தில்நாதன்

வெஸ்டன், புளோரிடா தெற்கு

ரோபோடிக்ஸ் (Robotics) பற்றி - தியா

வணக்கம் நான் தியா நான் கிரேட் வேலி உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு படிக்கிறேன. எனது பள்ளி ரோபோட்டிக்ஸ் கிளப்பில் கடந்த 4 ஆண்டுகளாக ரோபோட்டிக்ஸ் செய்து வருகிறேன். நான் லிபர்ட்டி சயின்ஸ் அருங்காட்சியகத்திற்குச் சென்றபோது, உயர்நிலைப் பள்ளி பெண்கள் குழுவினால் ரோபோக்கள் காட்சிப்படுத்தப்பட்ட ஆரம்ப நாட்களில் இருந்தே குறியீட்டு முறை மற்றும் ரோபோக்களில் ஆர்வமாக இருந்தேன். எனது இடைநிலைப் பள்ளி ஆண்டுகளில் எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தபோது, அணியில் சேரவும் அதை உருவாக்கத் தொடங்கவும் நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன். நான் ஆரம்பித்தபோது எனது பள்ளியில் முதலாம் ஆண்டு ரோபாட்டிக்ஸில் பெண்களின் பங்கேற்பு மிகக் குறைவாக இருந்தது, ஆனால் விரைவில் அதில் ஆர்வமுள்ள பெண்களின் அதிக பங்கேற்பைக் காண ஆரம்பித்தேன். அதில் அதிகமான பெண்களை ஊக்குவிக்க, நான் நடுநிலைப் பள்ளிக்குச் சென்று, ரோபாட்டிக்ஸ் கிளப்புக்கு ஆதரவாக அறிமுக உரைகளை வழங்கத் தொடங்கினேன், மேலும் ரோபாட்டிக்ஸ் பில்ட் அமர்வுகளின் போது அவர்களைச் சந்திக்க எனது ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி, அவர்களால் முடியாமல் சிக்கித் தவிக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுகிறேன்.

ரோபோட்டிக்ஸில் 4 ஆண்டுகளில் நான் கற்றுக்கொண்டது வெற்றி பெறுவது ஒவ்வொரு அணிக்கும் இறுதி ஆனந்தம், இருப்பினும் ரோபோவை உருவாக்குவதற்கான செயல்முறை ஒரு செங்குத்தான கற்றல் வளைவாகும். அளவீடுகள், சமநிலையின் இயற்பியல், மோட்டாரின் இயக்கவியல், ஆற்றல் பரிமாற்றம் போன்றவற்றைப் பற்றி நான் கற்றுக்கொண்டேன் என்று சொல்லலாம். இது தவிர நேர மேலாண்மை, டெலிவரி காலக்கெடு மேலாண்மை, அமைப்பு (*organization*), தலைமை மற்றும் வழிகாட்டுதல் ஆகியவை மிகவும் விலைமதிப்பற்றவை. இந்த திறமைகளால் என்னால் மாநில அளவிலான போட்டிகளை அடைய முடிந்தது, மேலும் இந்த ஆண்டு வடிவமைப்பு விருதை (*design award*) வெல்வதிலும், வேர்ல்ட்ஸ் விளையாட்டில் இறுதி வெற்றியிலும் கவனம் செலுத்துகிறேன்.

எனது இதயத்திற்கு மிக நெருக்கமான ஒரு புள்ளியுடன் எனது கட்டுரையை முடிக்க விரும்புகிறேன், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது அனைத்து பாலினத்தவர்களும் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும், அவர்களின் நிதி, சமூக நிலை என்னவாக இருந்தாலும் சரி.



கவிச்சாரல்

புலம்பெயர் பறவைகள்

வானம் எங்கள் வசம் என்று
வாழ இடம் தேடி தாய் மண் தமிழக ஆலமரம் விட்டு ,

அயல் மண்ணில் கொடிமரம் ஒன்றில்
கூடுகட்டிய புலம்பெயர் பறவைகள் நாங்கள்.

இந்த பூமி முழுதும் நமது சொந்தம் என்று எண்ணி
சொந்த பந்தங்களை விட்டு விமானச் சிறகு விரிக்க ,

வானில் மேகங்களெல்லாம்
எங்களுக்கு பூமாலையிட்டு வரவேற்க,

எங்கள் கனவு சிறகு விரித்துப்
பறக்க வந்தோம் சிறு பறவைகளாக

கடல் கடந்து , நாடு விட்டு நாடு வந்த
நாங்களும் புலம் பெயர் பறவைகள்தான்.

வீடு விற்று கடன் வாங்கி, குடும்பம் காக்க
வந்த நாங்கள் உழைக்கும் பறவைகள்தான்.

ஊர் வாழ, உறவுகள் உயர்ந்து நிற்க
சுமைதாங்கும் பறவைகள் நாங்கள்.

அண்ணாந்து பார்த்து வாழாமல் உயர்வோம்.
நம்பிக்கையுடன் வாழும் பறவைகள்.

வருடம் ஒரு முறை ஊர் சென்றுப் பார்க்க
நினைக்கும் ஊர்க் குருவிகள் நாங்கள்.

உயர உயரப் பறக்கும் நாங்கள் சோதனை தீயில்
தினம் அழிந்து உயிர்ப்பிக்கும் பீனிக்ஸ் பறவைகள்.

காகம் போலக் கூ டி வாழ நினைத்தாலும்
பருந்து போல தனித்துப் பறக்கும் பறவைகள்

தாயகம் விட்டு அயல் மண்ணில் பிழைக்க
வந்த நாங்களும் புலம்பெயர் பறவைகள்தான்.

இந்துமதி ஜெயபால்,
சான் பிரான்சிஸ்கோ வளைகுடாப் பகுதி

தூங்காத இரவொன்றில்..

கடிகாரத்தின் நொடி முள்ளை எழுதுகோலாக்கி
மேகத்தின் கரு'மை'யை ஊற்றி
நட்சத்திர தீப ஒளியில்
நிலவெனும் வெள்ளைக் காகிதத்தில்
எதையோ எழுதிக் கிடக்கிறேன்!
தூங்காத இரவொன்றில்..
தூரத்து மரக்கிளையில் அமர்ந்த ஓர் பறவை
கவிதை என்றெண்ணி
தனது மொழியில் மொழிபெயர்த்து
வாசித்துப் பறக்கிறது!
தூங்காத இரவொன்றில்..
எழுதுகோலாகிய நொடி முள் மெல்ல நகர்கிறது..
'மை'யாகிய கருமேகம் மௌனமாய்க் கலைகிறது..
தீபமாகிய நட்சத்திரம் ஊதாமல் அணைகிறது..
காகிதமாகிய வெண்ணிலா உரசாமல் தேய்கிறது..
தூங்காத இரவொன்றில்..
தூங்கி வழிந்தபடி
விடிகிறது என் காலை!

–ஸ்ரீ
சான் ஃபிரான்சிஸ்கோ வளைகுடாப் பகுதி தமிழ் சங்கம்,
சான் ஹோசே(கலிஃபோர்னியா).

மதவெறி மாய்ப்போம்!!!

மாக்களாய் மாற்றும் மதவெறி அழிப்போம்!
ஒற்றுமை ஒன்றே வாழ்வென உரைப்போம்!

சாதி சமய பூசல்கள் தவிர்ப்போம்!
அன்பினால் நம் உலகை அணைப்போம்!

பிறர் மதம் இழிவென கருதுதல் பிணியாம்!
அனைவரும் உறவென நினைப்பது உயர்வாம்!

மேலவர் கீழவர் பிறிப்பது மதமாம்!
மனிதநேயம் இல்லையேல் அது மயிருக்கு சமமாம்!

மாமன் மச்சான் என அழைப்பது நிலையாம்!
இந்து முசுலீமாய் பிரிப்பது பிழையாம்!

நன்மைபல புரிந்திடவே எம்மதமும் உரைத்தது!
சிலரின் பிரித்தாளும் சூழ்ச்சியினால் மானுடமே சிதைந்தது!

மதவெறி வளர பல கல்லறைகள் உண்டாகும்!
மனிதம் மலர நம் சந்ததிகள் நலமாகும்!

மதவெறி தீண்டாமை மானுடத்தின் நொடியாம்!
யாவரும் கேளிரென வாழ்தல் தமிழ்க் குடியாம்!

தடைகள் உடைப்போம் தவறுகள் களைவோம்!
மனிதம் கொண்டே மதவெறி மாய்ப்போம்!

சுல்தான்
(Bothell)
BOTHELL, WA
சியாட்டல் தமிழ்ச் சங்கம்



கடற்கரை மணல்

கடற்கரையின்
நீண்ட மணல்வெளியில்
வெற்றுப் பாதம்
கொண்டு நடந்தேன்...
இளஞ்சூட்டு மணலில்
பாதங்கள் புதைந்து எழ
காதலுற்றேன்
கடற்கரை மணலோடு!

கடற்கரைக் காற்றோடு
கலந்து வந்த
கரியடுப்பின் புகைவாசம்
ஏதோ பள்ளிப்பருவ
நினைவுகளைத் தூண்ட
தானாகவே கால்கள் செல்ல
ஒரு வண்டிக்கடை முன்
வந்து நின்றேன்!

இரும்பு சட்டியில்
ஒவ்வொன்றாய் பூத்து நிறைந்த
சோளப்பொரியைக் கண்டு
மனமும் பூத்துவிட
நானும் அதை
கையில் வாங்கி
கொறித்துக் கொண்டே
நடந்தேன்!

ஈரேழு ஆண்டுகள்
அயல்நாட்டுவாசம்
வேண்டுவன அனைத்தும்
அள்ளித் தந்த போதும்...
மூவேழு நாட்கள்
நீள் விடுமுறையை எண்ணியே
நத்தையாய் நகரும்
மீதமுள்ள நாட்கள்!

ஏதோ புலம்பலில்
சிக்கிய என் மனதை
மீண்டும் ஒருநிலை படுத்தியது
கூந்தல் களைத்த
கடற்கரைக் காற்றும்
காலடியில் கிடந்த
அலைகள் வடிந்த
ஈர மணலும்!

எத்தனை கடற்கரை
எங்கெங்கு கண்டும்
மனம் நாடுவதோ
திசையெங்கும்
தமிழ் காற்று வீசும்
இந்த வங்கக் கடலின்
கரையைத் தானே...?

அடுத்த அடி
நான் எடுத்து வைப்பதற்குள்
முந்திக்கொண்டு வந்து
கால்கள் நனைத்தது
சிறு அலைகள்...
என்னை வீட்டிற்குள் அழைக்க
வாசல்வரை ஓடிவந்த
உறவுக்காரியைப் போல்!

மனதின் கனங்களை மறந்து
உதட்டில் புன்னகை பூத்து
அலைகளை ரசித்திருந்தேன்...
அருகில் வந்து நின்றது
இன்னொரு கால்கள்
என் பள்ளிப்பருவத் தோழி வந்தாள்!

அவளைக் காணத்தான்
நானும் வந்தேன்...
பார்த்ததும் அவள் உதிர்த்த
ஒற்றைச் சிரிப்பில்
என் உலகையும்
அதன் இயந்திரத்துவ வாழ்வையும்
மறக்கச் செய்து விட்டாள்!

இருவரும் சேர்ந்து
அலைகளோடு விளையாடினோம்
கரையோரமாய் கைகோர்த்து நடந்தோம்
சொல்லாமல் போன
கதைகளைப் பகிர்ந்தோம்
அவித்த கடலையும் பஞ்சுமிட்டாயும்
வாங்கிச் சுவைத்தோம்!

வாழ்க்கை
என்றாவது ஒரு நாள்

ஆரம்பித்த இடத்தைத் தேடி வரும்
என்பது உண்மை தானோ
என்று கூடத் தோன்றியது எனக்கு...
வாங்கி வந்த சிற்றுண்டி
தீர்ந்துவிட்ட போதும்...
தீராமலேயே தொடர்ந்தது
எங்கள் பேச்சுக்கள் மட்டும்!

நான் கண்ட
இயந்திர வாழ்வால்
சோர்வுற்ற ஊக்கமில்லா
என் பேச்சைக் கேட்ட அவள்
என்னிடம் ஒன்று தான் கேட்டாள்...
இரவும், பகலும் அங்கும் உண்டல்லவா?
என்று...

என் புலம்பல்
கேலியாய் போனதோ
என்பது போல் முறைத்தேன்
கண்களைச் சிமிட்டினாள்
வெறும் விளையாட்டு தானே என்றாள்
இருவரும் சேர்ந்து சிரித்தோம்!

உண்மையில்
கேலிப்பேச்சல்ல
அவளது நிதர்சனப் பேச்சால்
என் எண்ணங்களை
வேறு திசையில்
பயணிக்க வைத்து விட்டாள்!

இயந்திர வாழ்க்கை என்று
நான் எண்ணிய
அதே ஆண்டுகளை
மீண்டும் திரும்பிப் பார்க்க செய்தாள்
ஒரு புதிய கண்ணொட்டத்தில்...

பிள்ளைகளின்
மழலைப் பேச்சுக்கள்...
கணவன் சமைத்த பண்டங்கள்...
போகாத இடங்களுக்கு
மகிழுந்து பயணங்கள்...

மலைப் பாதையில்
நெடுந்தொலைவு
நடை பயணங்கள்...
நீச்சல் தெரியாத போதும்
பயத்தை மறைத்து
ஏரியில் படகோட்டிய தருணங்கள்...

தினமும் வைக்கும்
பறவைத் தீவனம்
ஒரு நாள் மறந்தால்
மரக்கிளையில் நின்று
கொஞ்சி அழைக்கும் நீல அழகிகள்...
மாலை நேரத்தில்
மரக்கிளையில் தாளமிடும்
மரங்கொத்திகள்...

வீட்டின் முன்
தொங்கும் பூத்தொட்டியில்
கூடுகட்டும் குருவிகள்...
வீட்டுத் தாழ்வாரத்தில்
அண்ண நடை பயிலும்
ஆமைப் புறாக்கள்...

இளவேனில் காலம்

காஞ்சனா பக்தவத்சலம்
பிட்ஸ்பர்க்,
பென்சில்வேனியா

வந்து விட்டால்
தோட்டத்தில்
பூத்துக் குலுங்கும்
இளஞ்சிவப்பு ரோஜாக்கள்...

வாழ்வின்
இயந்திரத்துவத்தை மறந்து
இயற்கையின் இனிமையில்
நான் நனைந்த
தருணங்கள் தான்
எத்தனை எத்தனை...?

இத்தனையும்
சிந்திக்க வைத்த
என் தோழியை
கட்டித் தழுவினேன்...
அவளுக்கு நன்றி சொல்லி
வீடு திரும்பத் தயாரானேன்...

பத்திரமாகப் போய்விடுவாய் அல்லவா?
வீடுவரை வரட்டுமா? என்றாள்
என்னை முத்தமிட்டு வழியனுப்பினாள்
கனத்த மனதோடு
திரும்பி நடந்தேன்...
இத்தனை அன்பையும்
எத்தனை காலமாய்
இழந்துவிட்டேன்...!

உறவுகளுக்கெல்லாம் விடை சொல்லி
ஊருக்குப் புறப்படும் வேலையிலில்
நானும் உடன் வருவேன் என்று
காலைக் கட்டிக்கொண்டு
அடம் பிடிக்கும்
தங்கையின் கடைசி
பிள்ளையைப் போல்
காலோடு ஒட்டி வந்த
கடற்கரை மணலோடு
காதலுற்றேன்...!

தமிழால் இனைந்தோம்! நன்றி!

கனவு
கண்டான் பாரதி...

"டீச்சர் ஒரு மீசைதான் இருக்கு?" என்று படபடப்பாக வந்து சொன்னார் தமிழ்ச்செல்வி டீச்சர்.

"ஆமா பாரதியாருக்கு ஒரு மீசைதானே?" என்று ஏதோ நகைச்சுவை சொல்லிவிட்டது போலச் சிரித்தார் வேணி டீச்சர்.

"என்ன டீச்சர் வேடிக்கையா? கட்டபொம்மனுக்கும் மீசை இருக்கும்." என்று பதிலுக்கு நகைச்சுவை சொன்னார் தமிழ்ச்செல்வி.

"அட ... ஆமா நான் பர்ச்சேஸ் பண்றப்ப இத யோசிக்கவே இல்ல ..."

"என்ன டீச்சர் ரொம்ப சாதாரணமாச் சொல்றீங்க ... மேடை ரெடியாகிடுச்சு ... ஒவ்வொரு நிகழ்ச்சியா அறிவிச்சிடுவாங்க" என்றார் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் நேர்த்தியாகவும் தத்ரூபமாகவும் பார்வையாளரைக் கவரவேண்டும் கைதட்டல்கள் அரங்கத்தை அதிரவைக்கவேண்டும் என்றும் கவனமாக இத்தனை நாள்கள் மாணாக்கர்களுக்குப் பயிற்சிகொடுத்துவந்த தமிழ்ச்செல்வி டீச்சர்.

"வரிசைப்படி யாரோட நிகழ்ச்சி மொதல்ல வரும், பாரதியாரா? இல்ல கட்டபொம்மனா?"

"ஓ ... நீங்க அப்படி வறீங்களா ... உங்க யோசனை புரியுது, ஒருத்தர் நிகழ்ச்சி முடிஞ்சதும் அந்த மீசையை அடுத்த நிகழ்ச்சிக்கு பயன்படுதலாம்ன்னு சொல்ல வறீங்க"

"யெஸ்"

"சரியாப்போச்சு போங்க ... இது பாண்டஸி நிகழ்ச்சி. பாரதியாரும் கட்டபொம்மனும் ஒரே மேடையில நின்னு பேசினா எப்படியிருக்குங்கற கற்பனை."

"வேற வழியே இல்லையா?" என்று கேட்டுக் கொண்டிருக்கும்போதே வேணி டீச்சரின் கைப்பேசி ஒளிர்ந்து ஒலித்தது. அழைப்பை ஏற்று காதில் வைத்துக்கொண்ட வேணி டீச்சர், "நீங்க மேனேஜ் பண்ணுங்க டீச்சர்" என்று தமிழ்ச்செல்வி டீச்சருக்கு அவசரமாகச் சொல்லிவிட்டு தனது கைப்பேசி அழைப்பில் கவனமானார், "யெஸ் ... அப்படிதான் ... வந்துட்டே இருக்கேன்" என்று கைப்பேசி அழைப்புக்கு பதில்சொல்லிக்கொண்டே நகர்ந்தார் வேணி டீச்சர்.

"அட போங்க டீச்சர், பசங்க ரெண்டுபேருக்கும் நிஜமான ஒட்டுமீசை வேணும்" என்ற தமிழ்ச்செல்வியின் வாய்மொழி வேணியின் காதுகளில் விழுந்திருக்க வாய்ப்பில்லை.

கடந்த வாரம் ஒருநாள் வகுப்புகள் முடிந்து வீட்டிற்குச் செல்ல பேருந்துநிலையம் நோக்கி நடந்துகொண்டிருந்தனர் வசந்தும் குமாரும். "டேய் குமார் நீதான் வீரபாண்டிய கட்டபொம்மன்" என்றான் உற்சாகமாக வசந்த்.

"என்னடா சொல்ற?" என்று ஏதுமறியாதவனாகக் கேள்வியெழுப்பினான் குமார்.

"இன்னிக்கு டான்ஸ் பிராக்டிஸ் பண்ணினப்போ புது கான்செப்ட் ஒண்ணு செய்யலாம்னு நம்ம கிளாஸ் தமிழ்ச்செல்வி டீச்சரும் ஆறாவது 'பி' செக்சன் ராஜன் சாரும் பேசிக்கிட்டாங்க. அதுல பாரதியாரும் கட்டபொம்மனும் வருவாங்க. எனக்கு பாரதியார் மாதிரி நிஜ மீசை வச்சு மேடைல பேசணும்னு போன வருஷம் நம்ம சீனியர் அண்ணன் பழனிவேலுவ பார்த்ததிலிருந்தே ஆசை. நானே டீச்சர்கிட்ட போய் நான் பாரதியார் பண்ணட்டுமான்னு கேட்டேன்,

அதுக்கு பாரதியார் கவிதை ஒண்ணு மனப்பாடமா சொல்லணும் அப்பறம் மைக்ல பேசணும் இதெல்லாம் செய்வியான்னு கேட்டாங்க, நான் செய்வேன்னு சொன்னேன். அப்போ ராஜன் சார் சொன்னார் இவன் பாரதியார் பண்ணட்டும் கட்டபொம்மனுக்கு குமாரைப் போடலாம்னு" என்று ஆசிரியர்கள் பரிமாறிக்கொண்ட ஆண்டுவிழா நிகழ்ச்சி உரையாடலைக் குமாரிடம் பகிர்ந்தான் வசந்த்.

"நிஜமாவாடா சொல்ற" என்று கண்களை அகல விரித்தான் குமார்.

"ஆமா டா" என்று அவசரமாக பதிலுரைத்துவிட்டு "எனக்கு பஸ் வந்துடுச்சுடா நான் கிளம்பறேன்" என்று தான் பயணிக்க வேண்டிய பேருந்தில் ஏறினான் வசந்த். குமார் தன்னுடைய வழித்தடப் பெருந்திற்காகக் காத்திருந்தான்.

வீட்டில் நுழைந்தது முதல் வசந்தின் மீசைக் கனவு இன்னும் அடர்த்தியாக வளரத்தொடங்கியது. "என்னடா ... சிரிப்பும் கும்மாளமுமா இருக்க" என்றார் மகிழ்ச்சியுடன் காணப்பட்ட வசந்தைப் பார்த்து அவனுடைய அப்பா.

"அட அத ஏன் கேட்கறீங்க ... ஸ்கூல் விட்டு வந்ததுல இருந்து ஒரே ஆட்டந்தான் ... கண்ணாடி முன்னாடி நின்னுக்கறான் ... ஆள்காட்டி விரலை மடிச்சு உதட்டுக்கு மேல வச்சி ... அச்சமில்லை அச்சமில்லை ன்னு பாரதியார் பாட்டு பாடுறான். அவன் போக்கே வித்தியாசமா இருக்கு" என்று அப்பா மகனைக் கேட்ட கேள்விக்கு அம்மா பதில் சொன்னார்.

"ஆமாப்பா, ஆண்டுவிழால நான் பாரதியார் மாதிரி பேசப்போறேன். உங்கள மாதிரி மீசை வச்சுக்கப்போறேன், நிஜமான ஒட்டுற மீசை வாங்கப்போறதா எங்க டீச்சர் சொன்னாங்க." என்று அச்சமில்லை அச்சமில்லை பாடிக்கொண்டே குதித்தான். "அப்பா மீசையை ஒட்டிவைக்கும்போது அது மூக்கில் குத்துமா?" என்று கேட்டான்.

"அவ்வளவா குத்தாது" என்றார் அப்பா சிரித்துக்கொண்டே.

"மூச்சுக்காத்து மீசைமேல படுமா? மீசை விழுந்துடுமா?" என்றவாறு ஆசை மீசைக் கணைகளை அப்பாவிடம் தொடுத்துக்கொண்டிருந்தான் வசந்த். அன்புடன் அவற்றை ஏந்திக்கொண்டு அப்பா புன்னகை பூத்தவாறு பதில் சொல்லிக்கொண்டிருந்தார். மகனுக்கும் அப்பாவுக்கும் இடையில் உலவும் மீசை உரையாடல்களைக் காதில் வாங்கியவாறே தன் கணினியில் கவனம் செலுத்திக்கொண்டிருந்தாள் அம்மா.

மீ.மணிகண்டன்

ஆஸ்டின் தமிழ்ச்சங்கம்

அப்பாவும் அம்மாவும் வாசிக்கும் வாரப்பத்திரிகை ஒன்றைப் புரட்டினான் வசந்த். அதில் கதைகளுக்கு வரையப்பட்டிருக்கும் ஓவியங்களையும் அதில் உலவும் ஆண்பாத்திரங்களின் மீசையையும் கூர்ந்து கவனித்தான். இவருக்கு மீசை மெலிதா இருக்கு இன்னும் கொஞ்சம் கனமா வரைஞ்சிருக்கணும் என்று கற்பனையில் அந்த ஓவியருக்கு யோசனை சொன்னான். மற்றொரு ஓவியத்தில் ஆண் பாத்திரத்திற்கு மீசை இல்லாமல் இருந்தது இவருக்கு ஒரு மெல்லிய மீசை வரைஞ்சிருந்தா நல்லா இருந்திருக்கும் என்று யோசித்தான். அவனது நினைவு முழுவதிலும் மீசை முளைத்திருந்தது. திடீரென நினைவு கொண்டவனாக அப்பாவின் மேசையில் இருக்கும் பாரதியார் படத்தைக் காண அப்பாவின் அறைக்கு ஓடினான். தலைப்பாகை நெற்றிப்பொட்டு முறுக்கிய மீசையென்று கம்பீரமாகக் காட்சியளித்தார் பாரதியார். ஆள்காட்டி விரலை வளைத்துத் தன் மேலுதட்டின் மீது வைத்துக்கொண்டான் வசந்த்.

உறக்கம் வராமல் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான் வசந்த். பாரதியார் கவிதையை டீச்சர் கொடுத்த நாள்முதல் படித்து மனப்பாடம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். மீசையைத் தடவிக்கொண்டு கவனமாகவும் கம்பீரமும் மேடையில் நிற்கும் காட்சி அவன் மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்தது. புரண்டு கொண்டிருக்கும் வசந்தைக் கண்ட அப்பா மெல்லிய குரலில் சொன்னார் "டேய் நல்லா தூங்கி எழுந்தாத்தான் நல்லா ப்ராக்டிஸ் பண்ணலாம். நல்லா பிராக்டிஸ் செய்தால்தான் ஆண்டுவிழா அன்னிக்கு நல்ல பெர்பார்ம் பண்ணலாம். வெறும் மீசை மட்டும் ஒட்டிகிட்டா பத்தாது. நல்லா தூங்கு" என்று மகனுக்குப் போதித்துவிட்டு உறங்கச்சென்றார் அப்பா.

அடுத்தநாள் பயிற்சி தொடங்கியது. உணவு இடைவேளையில் தமிழ்ச்செல்வி டீச்சர் வசந்த் மற்றும் குமாரை அழைத்தார். பாரதியார் பேசவேண்டிய உரையையும் கவிதையும் காகிதத்தில் பதிவு செய்து வசந்திடம் கொடுத்தார். அதேபோல் வீரபாண்டிய கட்டபொம்மன் வசனங்களைக் குமாரிடம் கொடுத்தார். எப்படி ஏற்ற இறக்கங்களோடு பேசவேண்டும்,எங்கே இடைவெளி விடவேண்டும், எப்படி எங்கே பார்க்கவேண்டும், எப்படி நடக்கவேண்டும் என்று இருவருக்கும் பயிற்சியளித்தார் டீச்சர். "டீச்சர் மீசை

எப்போ குடுப்பீங்க?" என்றான் வசந்த்.

"அந்த ஏற்பாடெல்லாம் ஆண்டுவிழா அன்னிக்குத்தான் இருக்கும். அதுவரை நீங்க மற்றதை பிராக்டிஸ் பண்ணுங்க. சரியா?" என்று பயிற்சிகளை உறுதிப்படுத்திக்கொண்டார் தமிழ்ச்செல்வி டீச்சர்.

அன்றுமுதல் மீசைக் கனவுகளோடும் நேர்த்தியான பயிற்சியோடும் தொடர்ந்து, இதோ இன்று மேடையேறத் தயாராகிவிட்டான் வசந்த். தலைப்பாகை வைத்துக்கொண்டும் நெற்றிப்பொட்டுடனும் முக்கால்வாசி பாரதியாராகிவிட்டான் மீசை மட்டும் பொருத்திக்கொள்ளவேண்டும். தமிழ்ச்செல்வி டீச்சரின் வரவிற்காக மேக்கப் அறையில் காத்திருந்தார்கள் வசந்தும் குமாரும்.

இடுப்பில் இடப்புறத்தில் அட்டை வாளைச் செருக முயற்சித்துக் கொண்டிருந்தான் குமார். "டேய் வசந்த் இந்த வாளைக் கொஞ்சம் உள்ள வச்சுவிடுடா" என்று தன் இடப்பக்கத்தை வசந்துக்கு லாவகமாகக் காட்டி நின்றான் குமார்.

"அட அதுக்கென்னடா அவசரம் ... எங்க உன் கிரீடம்?" என்று குமாரின் கலைந்திருந்த தலைமுடியை மேலும் கலைத்து விட்டுச் சிரித்தபடி அவன் அணிந்திருந்த கட்டபொம்மன் உடையில் வாளைப் பொருத்தி விட்டுக் கொண்டிருந்தான் வசந்த்.

"நானே இன்னும் தலை சீவல... மேக்கப் மேன் கிட்ட கேட்டா சொல்றார் கட்டபொம்மன் கிரீடம்தான வைக்கப்போற ... தலை முடிய எதுக்கு சீவனும்னு" என்று சொல்லிவிட்டு வசந்த பொருத்திய வாளை ஒருமுறை தொட்டுச் சரிபார்த்துக்கொண்டான் குமார்.

மீசை ஆசை என்பது சின்ன ஆசை அல்ல. இன்று அது நிறைவேறப்போகிறது. பொருத்திக்கொண்ட மீசைக்கு சிறிதும் பாதகம் நேர்ந்துவிடாவண்ணம் கவிதைசொல்வதிலும் பேசுவதிலும் செயல்படவேண்டும் என்று மீண்டும் தன்னைத் தயார்படுத்திக்கொண்டான் வசந்த். தனது ஆள்காட்டி விரலை வளைத்து மேலுதட்டின்மீது வைத்து அச்சமில்லை அச்சமில்லை கவிதையை முணுமுணுத்தபடி இங்குமங்கும் உலாவிக் கொண்டிருந்தான். மீசையைப் பொருத்திக்கொண்டதும் எப்படிச் செயல்படவேண்டுமென்று மிடுக்காக நடந்து பார்த்துக்கொண்டிருக்கும் வேளை அறைக்குள் தமிழ்ச்செல்வி டீச்சர் நுழைந்தார்.

வசந்த மற்றும் குமார் இருவரும் கோரசாகக் கத்தினர், "டீச்சர் நாங்க தயார் ஆயிட்டோம். மீசை மட்டும் கொடுங்க?"

"மீசை தானே ... வச்சிருவோம்" என்று புன்னகைத்தவாறே பாரதியார் மற்றும் கட்டபொம்மனின் அருகில் வந்தார் தமிழ்ச்செல்வி டீச்சர். இருவரும் தமிழ்ச்செல்வி டீச்சர் கையில் வைத்திருந்த அட்டைப்பெட்டியை நோக்கினர். கண்டிப்பாக அதற்குள் மீசை இருக்கிறது என்ற இருவரின் எதிர்பார்ப்புகளும் அவர்கள் கண்களில் எதிரொலித்தது.

அடுத்த நிகழ்ச்சி அறிவிக்கப்பட்டது. "பாரதியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள், கட்டபொம்மனைக் கதைகளில் கேட்டிருப்பீர்கள் இன்று இருவரையும் நீங்கள் நேரில் காணப்போகிறீர்கள். நம்மிடையே பாரதியும் கட்டபொம்மனும் ஒரேநேரத்தில் ஒரே இடத்தில் தோன்றினால் எப்படி இருக்கும் என்ற கற்பனையை நிஜமாக்கிக் காட்ட வருகிறார்கள் வசந்த் மற்றும் குமார் மேடைக்கு. உங்கள் பலத்த கரவொலியால் அவர்களை வரவேற்க வேண்டுகிறேன்" என்று ஒலிபெருக்கியில் ஒலித்தது அந்த அறிவிப்பு.

மேடையில் திரை விலகியது. பாரதியும் கட்டபொம்மனும் காட்சியளித்தனர். அரங்கத்தில் கரவொலி காதைப் பிளந்தது. முட்டிக்கொண்டு வந்த கண்ணீரை முகத்தில் வழியவிடாமல் சமாளித்தான் வசந்த். தமிழ்ச்செல்வி டீச்சர் எழுதித்தந்த பாரதியின் கவிதையை உணர்ச்சிபொங்கப் பாடினான். தனது தேம்பலை அடக்கிக்கொண்டு வீரவசனங்கள் பேசினான். முழுமையாகத் தன்னளவில் பாரதியை வாழ்ந்துகாட்டினான். கட்டபொம்மனாகக் குமார் அவனது பங்களிப்பைச் செய்தான். நிகழ்ச்சி நிறைவேறியது. திரை விழுந்தது. கண்களைக் கைகளால் மறைத்துக்கொண்டு மேடையிலிருந்து இறங்கினான் வசந்த். தனது ஒட்டுமீசைக்கனவு இப்படி ஒட்டாமல் போகுமென்று அவன் துளியும் எண்ணியிருக்கவில்லை. வகுப்பறைகள் கடந்து கழிவறைக்குச் சென்றான் தன் முகத்தைக் கண்ணாடியில் நோக்கினான். தலைப்பாகை தெரிந்தது, நெற்றியில் பொட்டு ஒளிர்ந்தது, தமிழ்ச்செல்வி டீச்சர் வரைந்துவிட்ட பென்சில் மீசை அவனது கண்ணீரில் கரைந்து கலைந்துகொண்டிருந்தது... வேகவேகமாக மேக்கப் அறைக்கு வந்தான். தலைப்பாகை மற்றும் உடைகளைக் களைந்து தன் இயல்பு உடைக்கு மாறினான்.

"நிகழ்ச்சியைச் சமாளிச்சிட்டீங்கபோல" என்றார் வேணி டீச்சர்.

"வேற வழி தெரியல டீச்சர் ஒருத்தருக்கு ஒட்டு மீசையும் ஒருத்தருக்கு பென்சில் கொடும் போட்டா ஒரே மேடையில பார்க்க நல்லா இருக்காது அதனால ரெண்டுபேருக்கும்பென்சில்கோடுபோட்டுவிட்டுடேன்."

தமிழ்ச்செல்வி டீச்சர் மற்றும் வேணி டீச்சரின் உரையாடலை காதுகளில் வாங்கிக்கொண்டு மேக்கப் அறையைக் கடந்து சென்றான் வசந்த். அவனது கண்களைத் தாண்டிய கண்ணீர் இன்னும் பென்சில் கோட்டை முழுதும் கலைக்காமல் வழிந்து கொண்டிருந்தது.

... மீ.மணிகண்டன்

உள்ளம் நலமாக உள்ளதா எனக் கேட்டுப் பாருங்கள்.

உள நலம்

Dr. திருநாவுக்கரசு மாணிக்கம்

நாம் யாரைச் சந்தித்தாலும் முதலில் சொல்வது, ‘நலமா’ என்பதுதான். ஏன்? மனித இனம் மற்றவர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்டது. பொதுவாக உடல் நலனைப் பற்றி மட்டும் கேட்கிறோம்.. தற்போது மக்கள் உடல் நலத்தில் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள். உணவு, உழைப்பு ஆகியவகைகளில் கவனம் செலுத்தி வருமுன் காப்போம் என உடல் போற்றி பாதுகாக்கப்படுகிறது. தடுப்பூசிகள் மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பழகி விட்டார்கள். உடல் நலனிலும் முன்னேற்றம் கண் கூடாகத் தெரிகிறது. நாளையிலிருந்து யாரைப் பார்த்தாலும், உங்கள் உள்ளம் நலமாக உள்ளதா எனக் கேட்டுப் பாருங்கள். களங்கமாக கருதப்படும்.

நம் அனைவரின் உள்ளத்திலும் இயல்பாக தோன்றும் ஒரு விடயத்தைப் பற்றி பார்ப்போம். ஏன் இப்படி நடந்து கொள்கிறோம்?, எதற்காக இப்படி ஆத்திரப்படுகிறோம், இப்படி நினைப்பது சரியா? என அன்றாடம் நமக்கு தோன்றுகிறது. எந்த காரணமும் இல்லாமல் ஏன் இதைக் கூறினேன் என தோன்றுவதில்லையா என்ன? மற்றவரைப் பற்றியும் இவ்வாறு நமக்குள் தோன்றுகிறது. இப்படி இருப்பதால் உறவுகள் பாதிப்புக்குள்ளாகிறது. உறவாடுவதில் சிரமம் ஏற்படுகிறது. உறவுகளை தவிர்க்கவும் செய்கிறோம். உண்மையில் அப்படி கூற, சொல்ல, நினைக்கவில்லை. ஆனால் வாய் தவறி வந்து விடுகிறது. இதனால் ஏனையோரோடு கலந்து செயல்பட முடியாது தவிக்கிறோம். காரணமில்லாமல் தவறுகள் நடந்து விடுகிறது. அதன் பிறகு சங்கடப்பட வேண்டியிருக்கிறது. ஏதோ சரியல்ல என தோன்றுகிறது. ஆனால், என்ன. ஏது என தெரியவில்லை.

நல்லதுதானே சொன்னேன், ஏன் தவறாக புரிந்துக்கொள்கிறார்கள்.? ஆசையாகத்தானே கூறினேன் ஏன் கோபப்படுகிறார்கள்? இவ்வளவு சிரமப்பட்டும் நான் ஏன் பிறரின் வெறுப்புக்கு ஆளாகிறேன். என் பிள்ளைகளிடம் பாசமாகத்தானே இருக்கிறேன். பிள்ளைகளின் மகிழ்ச்சிக்காகத்தானே இப்படி உழைக்கிறேன், இருந்தும் ஏன் குழந்தைகள் என்னைப் பற்றி இப்படி நினைக்கிறார்கள், என உள்ளம் சஞ்சலப்படுகிறதே ஏன்? எந்தவிதக் காரணமுமில்லாமல் ஏன் சோகமாக உணருகிறேன்? மகிழ்ச்சியான தருணங்களில் கூட மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லையே ஏன்? உள்ளம் அழுத்தமாக, கனமாக இருக்கிறதே ஏன்? இந்த எண்ணத்திற்கும் எனக்கும் என்ன தொடர்பு? எனக்கு ஏன் இப்படியெல்லாம் தோன்றுகிறது. இதற்கு என்ன செய்யலாம்?

இத்தகைய உளப்போராட்டத்தால், சஞ்சலத்தால், குழப்பத்தால் நமது முன்னேற்றம் தடைபடுகிறது. இதைச் சமாளிப்பதிலேயே நமது நேரம், காலம், சக்தி, உழைப்பு, மற்றும் பொருள் விரையமாகிறது.

முடிவெடுப்பதில் தவறுகள் ஏற்படுகிறது. முடிவாக குற்ற மனப்பான்மைக்கு ஆளாகிறோம். வாய்ப்புக்களை தவற விடுகிறோம்.

இவை அனைத்தும், உள்ளம் சம்பந்தப் பட்டதாகும். உள நலம் நன்றாக இருந்தால், உள்ளம் சிறப்பாக செயல்படும். உடல் நலத்தைப்போல் உள நலமும் இன்றியமையாத தாகும். இதுகாறும் உள நலனில் நாம் அதிக கவனம் செலுத்தவில்லை. சுபாவம், குணம் என ஒதுங்கி இருந்தோம். இனி அப்படி இருக்க முடியாது. உள நலனிலும் அக்கறை செலுத்தவேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம் என்பதை உணர வேண்டும். உள்ளத்தையும் நலமாக வைத்துக்கொள்ள நாம் அறிவது அவசியமாகும்.

.உள்ளம் என்பதைப் பற்றி பல நூற்றாண்டு களாக பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளது. உள நல மருத்துவர்கள், உள்ளம் என எதை கையாளுகிறார்கள் என பார்ப்போம். உணர்வுகள், எண்ணம், மற்றும் அறிவு ஆகிய மூன்றையும் உள்ளத்தின் உட்கூறுகளாகக் கருதுகிறார்கள் மற்றும் கையாளுகிறார்கள். ஒருவரின் நடத்தை மற்றும் நடவடிக்கைகளை தீர்மானிப்பது உள்ளம். உள்ளத்தின் உட்கூறுகளான உணர்வு, எண்ணம் மற்றும் அறிவு ஆகியவைகளை, ஒருவரின் நடவடிக்கைகளின் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். ஒருவரின் செயல்தான் உறவுகளை கையாளுகிறது. உணர்வு, எண்ணம் மற்றும் நோக்கம்தான் உறவுகளை பலப்படுத்துகிறது அல்லது பலவீனப் படுத்துகிறது. எனவே உள்ளத்தின் உட்கூறுகள் நல்லவையாக இருக்க வேண்டும். உள்ளம் நலமாக இருக்கும் பட்சத்தில் செயல்கள் நல்ல பலனை அளிக்கும் என்பது உறுதி. உள்ளத்தின் உட்கூறுகளை திறமையாக கையாளத் தெரிந்திருப்பது அவசியமாகும். இதைத்தான் உள நலம் என கூறுகிறோம்.

உள்ளத்தின் செயல்பாடு எவ்வளவு அவசியம் என கூறப்பட்டுள்ளது. உள்ளத்தின் சிறப்பு என பல அம்சங்களை பட்டியலிட்டுள்ளார்கள். திருப்தி, அமைதி, மகிழ்ச்சி, நிம்மதி ஆகியவகளின் முக்கியத் துவத்தைப் பற்றி அறிவுறுத்தப்பட்டுள்ளது. உள நோயைப் பற்றியும் வேண்டிய விடயங்கள் கூறப்பட்டுள்ளது. உள நோய் இல்லையென்பது வேறாகும். உள நலம் என்பது வேறாகும். உடல் நலத்தின் அளவுகோல்கள் கூறப்பட்டுள்ளன. எனவே அவைகளைக் கருத்தில் கொண்டு உடல் நலத்தை பேணுகிறோம். அதே போல் உள நலத்தின் அளவுகோல் நம்மிடையே புழக்கத்தில் இல்லை என்பது நிதர்சனமான உண்மை.

தன்னை உணர்ந்திருத்தல் *(Awareness of one's own self);*

மனிதர்களோடு சுமுககமாக உறவாடத் தெரிந்திருக்க வேண்டும் *(Ability to relate well with fellow humans);*

ஆற்றும் காரியம் அனைத்தும் தனக்கும் பிறருக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும், குறைந்தபட்சம் சங்கடத்தை விளைவிக்கக் கூடாது. *(All deeds and activities must be useful to self as well as others, at least it should not be detrimental to others)*

மேற்கூறிய மூன்று அம்சங்களும் உள நலத்தின் உட்கூறுகள் என அறியலாம். இவை மூன்றும் பெரும்பாலான மக்களிடம் இருக்கும் பட்சத்தில் சமூகம் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என சிறிது எண்ணிப் பாருங்கள். சமூகம், அவலங்கள் இல்லாமல், நிச்சயத்தன்மையுடன் கூடிய பாதுகாப்பான இடமாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது. மேற்கூறிய திறமையை வளர்த்துக்கொண்டால்தான் உள்ளத்தின் உட்கூறுகளாகிய, உணர்வு, எண்ணம், மற்றும் அறிவு ஆகியவற்றை சிறப்பாகக் கையாளலாம்.

பெரும்பாலான சமயங்களில் உள நலத்தின் உட்கூறுகளில் ஏதாவது ஒன்றில் குறையோ, மிகுதியோ, அல்லது பாதிப்போ ஏற்படும்போது உள நலம் பாதிக்கப்படுகிறது. அதை, இனம்கண்டு சீர் செய்வது அவசியமாகும். அப்போது உள சங்கடங்களுக்கு

வாய்ப்பில்லை. சமூக நலனும் மேம்படும் என்பது உறுதியாகும். இவ்வாறாக உள நலத்தை பேணி, பாதுகாத்து வருவது; நாமும் பிறரும் நிம்மதியாகவும், அமைதியாகவும் வாழ வழி வகுக்கும்.

தன்னை உணர்ந்திருந்தால் எடுக்கும் முடிவுகள் சரியாகவும், பொருத்தமாகவும் இருக்கும். முயற்சிகள் முழுமையாக இருக்கும். விளைவுகள் எதிர்பார்த்த படி அமையும். வெற்றி உறுதியாகும். நம்பிக்கை ஏற்படும். துணிவுக்கு வழி வகுக்கும். தன்னம்பிக்கை துளிர்க்கும். துணிவும், நம்பிக்கையும் நிச்சயத்தன்மையை உறுதி செய்யும். இவை இரண்டும் பாதுகாப்பு உணர்வை கொடுக்கும். நிம்மதி, அமைதி, மற்றும் திருப்தி ஏற்படும். மகிழ்ச்சிக்கு உத்திரவாதம் உறுதி செய்யப்படும். உறவுகள் கெட்டிப்படும். மக்களால் விரும்பப்படுவோம்.

தன்னை உணராவிடில் எடுக்கும் முடிவுகள் சரியாகவும் ,பொருத்தமாகவும் இருக்காது. விளைவுகள் எதிர்பார்த்தபடி அமையாது. ஏமாற்றத்திற்கு வழிவகுக்கும். ஏமாற்றம் வருத்தத்திற்கு அடிகோலும். வருத்தம் சோகத்தை உண்டுபண்ணும். நம்பிக்கை வீணாகும். தயக்கத்திற்கு காரணமாக அமையும். தன்னம்பிக்கை விலகிப்போகும். விரக்திக்கு வழிவகுக்கும். ஆத்திரம் உண்டாகும். எரிச்சல் ஏற்படும். வெறுப்பு ஏற்படும். வாழ்வதே வீண் என்ற எண்ணம் உண்டாகும். அமைதி இருக்காது. நிம்மதி , திருப்தி இல்லாமல் போகும். உள அழுத்தம் ஏற்படும்.. மக்களால் விரும்பப்படமாட்டோம். உள நலம் பாதிப்புக்குள்ளாகும்

இவ்வாறாக, அடுத்த இரண்டு அம்சங்களும் உள நலத்திற்கு இன்றியமயாததாகும்.

இதைத்தான் வள்ளுவர்,

“மன நலம் மன்னுயிர்க் காக்கம்” என வலியுறுத்தியுள்ளார்.

உடல் நலம், வாழ் நாளை அதிகரிக்கும்.

உள நலம்,வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும்.

எனவே, உள நலத்தோடு வாழ்வோம்.

தொடர்புக்கு: manickamthiru6@gmail.com

*Psychiatrist and Mental Health Professional.

**மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுக்குழு பேரவை உறுப்பினர்.

அம்மா உனைநாடி

அம்மா
ஆதியும் அந்தமுமாய்
இன்னல்கூட இன்முகமாய்
ஈன்றலென்னை உன் மகவாய்
உதிரத்தில் உயிர் கொடுத்தாய்
ஊன் உறக்கம் நீ மறந்தாய்
எனை சுமக்க மனம் உவந்தாய்
ஏக்கங்கள் பல துறந்தாய்
ஐயிரண்டு திங்கள் அடைகாத்தாய்
ஒவ்வாமையையும் நீ களித்தாய்
ஓய்வின்றி நீ உழைத்தாய்
ஔதசிய அமுதமாய் நீ புகட்டினாய்
எஃகு போல் இரும்பு மனுசியே
எழுபிறப்பிற்கும் நீயே என் தாயாவாய்

-நாகா
(நாகராஜன் ராஜேந்திரன்)

டென்னசி தமிழ்ச்சங்கம்

டென்னிசி தமிழ்ச்சங்கத்தின் 30வது ஆண்டு கொண்டாட்டத்தை சிறப்பாக முடித்து, மே 4, தன்னார்வலர் தூய்மை பணி *Pantheon Park*-ல், செய்தோம். ஜூன் மாதம் பறை மற்றும் சிலம்பம் வகுப்புகள் இணையவழியாக தொடங்கி விறுவிறுப்பாக நடக்கிறது.

ஆகஸ்ட் 10, *Indian Association of Nashville* நடத்திய இந்திய சுதந்திர தின அணிவகுப்பில், நம் தமிழர்களின் பாரம்பரிய கலைகளும் இடம் பெற்றன. ஆகஸ்ட் 24, குழந்தைகள் தினத்தில் திருக்குறள் ஓதுதல், கதை சொல்லுதல், வினாடி வினா மற்றும் ஓவிய போட்டிகளும் நடத்தப்பட்டு, அனைத்து குழந்தைகளுக்கும் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சங்கத்தின் உறுப்பினர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தூக்கமின்மை குறித்த விழிப்புணர்வு இணைய வழி மூலம் - *Dr. Bijoy John* தலைமையில் நடத்தப்பட்டது. செப்டம்பர் 21, பூ பந்து போட்டியில் குழந்தைகள் முதல் பெரியர்கள் வரை, பல பிரிவுகளில் ஆர்வமுடன் போட்டியிட்டனர்.

அக்டோபர் 5, ஆண்களுக்கான கை பந்து, பெண்களுக்கான எறி பந்து போட்டிகள் மற்றும் பள்ளி குழந்தைகளை ஊக்குவிக்கும் விதமாக கைபந்து போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. நவம்பர் - இசையின் இசைவில் நிகழ்ச்சி தனி நபர், குழு மற்றும் இசை கருவிகளுக்காக மட்டும் பிரத்தியேகமாக நடத்தப்பட்டது.

இந்த மாதத்தின் கடைசி நிகழ்வாக *STEM* பட்டறை, இடைநிலை மற்றும் மேல்நிலை பள்ளி குழந்தைகளுக்காக *Dr.* நந்தினி ராஜு, அவர்களின் தலைமையில் சிறப்பாக நடந்து முடிந்தது.

நியூ செர்சி தமிழ்ப் பேரவை

உடலுக்கும் உள்ளத்துக்கும் உற்சாகத்தையும் ஆரோக்கியத்தையும் தருகிற எந்தப் போட்டியும் நமக்கு மாற்றத்தை தரக்கூடியதுதான். அந்தப் போட்டிகள் வெறும் போட்டியாக மட்டும் இன்றி, ஒரு விழாவாகக் கொண்டாடப்படும்போது எல்லோருக்கும் பேரானந்தம் தருகிறது. அப்படியான விழாவை ஆண்டுதோறும் நடத்தும் நம் நியூ செர்சி தமிழ்ப் பேரவை, இந்த ஆண்டும் இலையுதிர் விழாவைச் சிறப்பாக நடத்தியது. 2024, நவம்பர் 17 அன்று சோமர்செட் நகரில் உள்ள பிராங்கிளின் நடுநிலைப் பள்ளியில் (*Franklin Middle School*) நடைபெற்ற ஆறாவது இலையுதிர் விழா, நியூ செர்சி தமிழ்ப் பேரவை வரலாற்றில் ஒரு முக்கியமான - மைல்கல் விழாவாக அரங்கேறியது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு அரங்கம் நிறைந்த ஓர் அருமையான நிகழ்ச்சியாக இலையுதிர் விழா நடைபெற்றதில் பேரவைக்கு மட்டுமல்ல, கூடியிருந்த 900 பேருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. விழாவில் வழக்கம்போலவே குழந்தைகளையும் பெரியவர்களையும் உற்சாகப்படுத்தும் விதத்தில் பல்வேறு போட்டிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த வகையில், 200க்கும் மேற்பட்டோர் போட்டிகளில் கலந்துகொள்ள தங்களது விருப்பத்தை தெரிவித்திருந்தனர். செஸ், கேரம் மற்றும் ஓவியப் போட்டிகளில் ஏராளமான குழந்தைகள் கலந்துகொண்டு தங்களது திறமைகளை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டினர். குறிப்பாக, குழந்தைகள் இலையுதிர் கருப்பொருளில் அழகான ஓவியங்களை வரைந்திருந்தது, அங்குள்ள பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது. அதேநேரத்தில், பெரியவர்கள் பலரும் ஒருசில விளையாட்டுகளில் கலந்துகொண்டனர். அது, வளரும் குழந்தைகளுக்கு மேலும் ஊக்கத்தைத் தருவதாக இருந்தது.

இப்படியாக, கலகலப்பூட்டிய விளையாட்டுப் போட்டிகளுக்கு பிறகு நியூ செர்சி, பல நடன பள்ளிகளின் அற்புதமான நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்தது. அவர்களுடைய பரதநாட்டியம், சிலம்பம், பறை... இவற்றுடன் குழந்தைகளின் நடனமும் பார்வையாளர்களை இமைகொட்டாமல் இருக்கச் செய்தது. இதன்மூலம் அவர்களின் திறம்பட்ட பயிற்சியும், கடினமான முயற்சியும் அதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட ஆடைகளுடன் பிரத்யேகமாக வெளிப்பட்டது.

அடுத்து, கொஞ்சம்கூட பார்வையாளர்களைச் சோர்வடையச் செய்யாத வகையில், நியூ செர்சி தமிழ்ப் பேரவை ஏற்பாடு செய்திருந்த மதன் இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி அரங்கேறியது. இசைக்குழுவினர், தங்களது வாத்தியக் கருவிகளைக் கொண்டு தனிப்பட்ட

பாணியில் இசைக்க இசைக்க, பார்வையாளர்கள் ஆரவாரம் செய்தனர். பின்னர், விஜய் டிவியின் சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் பிரபல பாடகர்கள் கலந்துகொண்டு, அவர்கள் சமீபகாலங்களில் பாடி அசத்திய அருமையான பாடல்களைப் பாடி விழா மேடையையே மெய்மறக்கச் செய்தனர்.

இசைக்கு மயங்காத உயிர்கள்தான் உலகில் உண்டோ எனும் வகையில், இந்நிகழ்ச்சி அங்குள்ளவர்களின் மனதைக் கவர்ந்திழுத்தது. மேலும் இசைக்குழுவினர் பார்வையாளர்கள் வேறுவகையில் கவனத்தைத் திருப்பாத வகையில் அடுத்தடுத்து அழகிய இசையைத் தந்தபடியே அவர்களை மயக்கிக் கொண்டிருந்தனர். தவிர, இந்த நிகழ்வு இசைக்குழுவினரையும் பார்வையாளர்களையும் பின்னிப் பிணைத்திருந்தது. இதன்காரணமாகவே, கூட்டத்தில் இருந்த ஒரு பகுதி இளைஞர்களும் பெரியவர்களும் நடனமாடியது, இசைக்குழுவினருக்கு மட்டுமல்லாது அங்குள்ளவர்களுக்கும் உற்சாகத்தைத் தந்தது.

இந்த நிகழ்விற்குப் பிறகு, நியூ செர்சியில் உள்ள பல்வேறு தமிழ்ப் பள்ளிகளைச் சேர்ந்த தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள், அடுத்த தலைமுறைக் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிப்பதில் அவர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையில் மேடையில் கௌரவிக்கப்பட்டனர். நிறுவனர்கள் சசிக்குமார், கபிலன் ஆகியோர் தமிழ்க் கல்விக்கு ஆற்றிய பங்களிப்புக்காக ஆசிரியர்களை வெகுவாகப் பாராட்டினர். அதைத் தொடர்ந்து, நியூ செர்சியின் இயக்குநர்கள் குழு 2024ஆம் அணியை கௌரவித்தது. தலைவர் சிறிலெட்சுமி கல்யாணசுந்தரம், துணைத் தலைவர் உதயக்குமார் கிருட்டிணமூர்த்தி, செயலாளர் செந்தில்வாசன் சீனுவாசன், இணைச் செயலாளர் பொற்செல்வி வேந்தன் மற்றும் பொருளாளர் கலா நரேசு ஆகியோர் அணியைக் கௌரவித்தனர்.

மேலும், ஆண்டு முழுவதும் தமிழ்ப் பணியாற்றும் நியூ செர்சி பொதுக்குழுவின் உறுப்பினர்களின் கடமையையும் சேவையையும் பாராட்டினர். அதைத் தொடர்ந்து, 2025ஆம் ஆண்டுக்கான அணியும் மேடையில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. நியூ செர்சி தமிழ்ப் பேரவையின் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் இணைந்து, இந்த இலையுதிர் விழாவை வெற்றிகரமாக ஏற்பாடு செய்ததில் குழந்தைகளின் திறமையை வெளிக்கொணர இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. இறுதியாக, ரஜினி உணவகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட இரவு உணவு எல்லோருக்கும் இன்பத்தைத் தந்தது; இனிய சுவையைத் தந்தது. அசைவம் மற்றும் சைவம் ஆகிய இரண்டு வகைகளில் தரப்பட்டிருந்த உணவுகளை அனைவரையும் உண்டு மகிழ்ந்தனர். இறுதியாக, நிகழ்வை ஒழுங்கமைத்துச் செயல்படுத்துவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட அனைத்து முயற்சிகளுக்கும் நிர்வாகக் குழுவின் சார்பாக பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இயக்குநர் குழு முதல் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், அவர்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் முன்வந்து எல்லா இடங்களிலும் நிகழ்ச்சி சிறப்பாக நடக்க பெரிதும் உதவியாக இருந்தார்கள். உற்சாகமாக ஆரம்பித்து அனைவரையும் ஆட்டம் ஆட வைத்த இந்த இலையுதிர் விழா மற்றுமொரு மறக்க முடியாத நிகழ்வாக அமைந்ததில் மகிழ்ச்சி.

நியூயார்க் தமிழ்ச்சங்கம்





கடந்த செப்டம்பர் 29 அன்று, இந்தியாவின் "நிலவு மனிதர்" என்று பெருமையுடன் போற்றப்படும் முனைவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்களுடன், ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியை, நியாயார்க் தமிழ்ச்சங்கம், குயீன்சு வட்டாரத்தில் உள்ள சரசுவதி மண்டபத்தில் அரங்கேற்றியது. அன்னாருக்கு பொன்னாடை போர்த்தி, சிறப்புப்பட்டயம் வழங்கிச் சிறப்பித்தது. அனைவருடனும் முனைவரின் சந்திரயான் மற்றும் மங்களயான் விண்கலத்திட்டங்களில் பணியாற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். பள்ளிக்குழந்தைகள் அனைவரும் ஆர்வமுடன் அன்னாரை, கேள்விக்கணைகளால் துளைத்து எடுத்தனர். அன்னாரும் மிகவும் பொருமையுடன் விளக்கமளித்து மகிழ்வித்தார். பிறகு, மதிய உணவுடன், நிகழ்ச்சி இனிதே முடிந்தது.

நியூயார்க் நகர மேயர் அவர்கள் முதன்முறையாக இவ்வருடம் அக்டோபர் 24 அன்று, தீபத்திருநாளாம் தீபாவளியைக் கொண்டாடும் விதமாக நியூயார்க் நகரில் உள்ள முக்கிய இந்திய அமைப்புகளுக்குச் சிறப்பு விருந்து வழங்கி மகிழ்வித்தார். இவ்விருந்தில், நியூயாரக் தமிழச்சங்க நிர்வாகக்குழுவினர் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மேயர் அவர்கள் தீபாவளி விழாவின் பாரம்பரியத்தின் பெருமையையும் விளக்கி உரை நிகழ்த்தினார். தீபாவளித்திருநாளை அனைவரும் சிறப்பாகக்கொண்டாட நியூயார்க் நகரின் அனைத்துப் பள்ளிகளுக்கும் விடுமுறை என்று சிறப்பு ஆணை வழங்கினார். இவ்விழாவில் கல்ந்துகொண்ட அனைத்து இந்தியர்களும் மேயருக்கு நன்றி தெரிவித்து மகிழ்ச்சியுடன் நிகழ்ச்சியை நிறைவு செய்தார்கள்.

டுவின்சிட்டீஸ் தமிழ் அஸோசியேஷன்

டுவின்சிடிஸ் தமிழ் அஸோசியேஷன் சார்பாக தீபாவளிப்பண்டிகை வெகு விமர்சையாக நவம்பர் 03, 2024 அன்று கொண்டாடப்பட்டது. மதியம் முதல் இரவு வரை நடைபெற்ற விழாவில் பல்வேறு கண்கவர் ஆடல், பாடல் மற்றும் மரபுக்கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

20க்கும் மேற்பட்ட குழந்தைகள் மேடையில் கைகளைக்கூப்பி முறையாகத் தமிழ்த்தாய் வாழ்த்து பாடி விழாவைத் தொடங்கி வைத்தனர். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை மேடை நிகழ்ச்சிகளில் பங்கேற்று அனைவரையும் மகிழ்வித்தனர். உறுப்பினர்கள் இதில் மிகுந்த ஆர்வத்துடன் பங்குகொண்டு தங்களின் திறமையை வெளிப்படுத்தினர். தீபாவளி கொண்டாட்டத்தின் முக்கிய அம்சமாக, வாழை இலை விருந்து அனைவரையும் கவர்ந்திழுத்தது. தலை வாழையிலைப் போட்டுத் தண்ணீரும் அதில் தெளித்து நேர்த்தியாக ஒருங்கிணைக்கப் பட்டபின் விருந்தினர்கள் பந்தியில் அமரவைக்கப் பட்டனர்.

அனைத்து உணவுகளும் அவர்களின் தேவைக்கேற்ப நிறைவாகப் பரிமாறபட்டன. விருந்தினர்கள் பலரும் தமிழ் மரபு ஆடை அணிந்து, விருந்தின் அழகை மெருகூட்டி சிறப்பாக்கினர். விருந்தின் மகிழ்ச்சி உணவின் சுவையைவிட யாருடன் உண்கிறோம் என்பதிலே தான் அடங்கியுள்ளது. வெளிநாடுகளில் உற்றாராகவும் உறவுகளாகவும் அமைந்த நண்பர்களுடன் கூடி விருந்து சாப்பிட்டதில் கூடுதல் மகிழ்ச்சி. மினசோட்டாவில் வசிக்கும் தமிழர்களுக்கும் இங்கு வளர்ந்து வரும் அடுத்தத் தலைமுறைக்கும் விருந்தின் சிறப்பினைக் கொண்டுசெல்ல உழைத்த அனைத்து தன்னார்வலர்களுக்கு மிக்க நன்றி. அவர்களின் அர்ப்பணிப்பு, மின்னசோட்டாவில் தமிழ் கலாச்சாரம் என்றும் நிலைத்து நிற்கும் என்பதை உறுதி செய்கிறது.

சாஸ்தா தமிழ் அறக்கட்டளை

சென்னையில் இயங்கி வரும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் புதிய கட்டிடத்திற்காக அமெரிக்காவில் செயல்பட்டு வரும் சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் சார்பில் 36 ஆயிரத்து 731 டாலர்கள் நிதியுதவி வழங்கப்பட்டது.

கடந்த பெரு வெள்ளத்தின் போது நூலகத்திற்குள் மழை வெள்ளம் புகுந்த காரணத்தினால் புதிய கட்டிடம் கட்டும் பணிக்காக சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் 14வது ஆண்டு நிதியளிப்பு விழாவில் இந்த தொகை வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 96 ஆயிரத்து 731 டாலர்கள் திரட்டப்பட்ட இந்த நிகழ்வில் மேலும் பல்வேறு நலத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் உதவும் கரங்கள் அமைப்பிற்கு 15 ஆயிரம் டாலர்கள், சாய் அஷ்ரயா தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை திட்டத்திற்கு 25 ஆயிரம் டாலர்கள், வடக்கு டெக்சாஸ் உணவு வங்கிக்கு 20 ஆயிரம் டாலர்கள் நிதியுதவி அளிக்கப்பட்டது.

செப்டம்பர் 21, 2024 அன்று நடைபெற்ற இந்த விழாவில் முத்தான மூன்று கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. அன்னம் சரவணன் இயக்கத்தில் தமிழில் முதன் முதலாக அரங்கேறிய நிழல் நாட்டிய நாடகம் பார்வையாளர்களை பரவசப்படுத்தியது. ராஜேஷ் துரைராஜ் இயக்கத்தில் உருவான ஓலைச்சுவடியிலிருந்து இணையம் வரை நாடகம் தமிழ் மொழியின் தொன்மையையும், நவீன உலகத்திற்கேற்ப தன்னை புதுப்பித்துக் கொள்ளும் புதுமையையும் பறை சாற்றியது.

திக்கெட்டும் பரவட்டும் திருக்குறள் நடனத்தை வடிவமைத்து இயக்கி இருந்தார் ஹேமா ஞானவேல். சுமார் 70 குழந்தைகள் பங்கேற்ற இந்த கலை நிகழ்ச்சிகள் பல்சுவையுடன் பார்வையாளர்களுக்கு இனிய மாலை விருந்தாக அமைந்திருந்தது.

வடக்கு டெக்சாஸ் உணவு வங்கி மூலம் ஒரு மில்லியன் பேருக்கு உணவு வழங்கும் திட்டத்திற்காக சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் சார்பில் ஒரு லட்சம் டாலர்கள் நிதியுதவி உறுதியளிக்கப்பட்டிருந்தது. மூன்றாவது கட்டமாக இந்த ஆண்டு 20 ஆயிரம் டாலர்கள் வழஙகப்பட்டுள்ளதாக வேலு ராமன் தெரிவித்தார்.

நிதியளிப்பு விவரங்களையும் தொடர்புடைய திட்டங்களையும் ரம்யா வேலு எலாவர்த்தி எடுத்துரைத்தார். நிகழ்ச்சிகளை ராதிகா நாராயணன் தொகுத்து வழங்கினார். வேலு ராமன், விசாலாட்சி வேலு நன்றியுரை ஆற்றினார்கள். சுமார் 50க்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டர்கள் விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம்

விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம் செப்டம்பர் மாதத்தில் சிகாகோ வந்த தமிழக முதல்வரை வரவேற்றத்துடன், கலைநிகழ்ச்சியிலும் பங்குபெற்றது. பவானி தினகரன், சுவப்ன ஸ்ரீனிவாசன், சுபா மோகன், ஷைனி சேவியர், மஞ்சுளா மணிவண்ணன், ரிவேகா ரத்தினம், ஆகியோர் தமிழர்களின் பாரம்பரிய கலையான கோலாட்டம் ஆடினார்.

அக்டோபர் 5 ம் நாள் முத்தமிழ் விழா சிறப்பாக சன் ப்ரைரி பள்ளியில் கொண்டாடப்பட்டது. சுஜாதா மோகன் வரவேற்புரை ஆற்ற, சிறுவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க, கலை நிகழ்ச்சிகளுடன் இசையும், நாடகம் நடைபெற்றது. தலைவர் வைத்திநாதன் செல்வராசு ஆண்டு உரையை நிகழ்த்த, துணை தலைவர் சங்கர் மாணிக்கம் நன்றி கூற, செயற்குழு உறுப்பினர்கள் ஜெயராமன், கபில் காமராஜ், சுவப்னா ஸ்ரீனிவாசன், பவனி தினகரன், கார்த்திக் வெங்கட்ராமன், சிவகுமார் பாலசுப்ரமணியம், நிரஞ்சனி ஐயர், சரிதா, ஜான்சிராணி பிரபாகரன் மற்றும் எண்ணற்ற தன்னார்வலர்களுடன் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். திரு.



சுவாமிநாதன் பாலச்சந்திரன் அவர்கள் மாணவர்களுக்கு பரிசினை வழங்கினார். அறுசுவை உணவுடன் முத்தமிழ் விழா நிறைவுற்றது. நவம்பர் 13 அன்று விஸ்கான்சின் மாகாண ஆளுநர் மாண்புமிகு டோனி எவெர்ஸ் விஸ்கான்சின் மாகாணத்தில் முதல் முறையாக தீபாவளி நிகழ்ச்சியை தமிழ்ச்சங்க நிர்வாகிகளுடனும், அணைத்து விஸ்கான்சின் வாழ் இந்தியர்களுடனும் கொண்டாடினர்.

FeTNA's International
Tamil Entrepreneurs Network
Presents
FiTEN
FeTNA International Tamil
Entrepreneur Network
GLOBAL TAMIL
ENTREPRENEURS
SUMMIT
FiTEN MADURAI 2025
Save the Date
Date: January 18, 2025 I Saturday
Venue: Courtyard by Marriott, Madurai
www.fetna.org I www.fiten.org
FiTEN
மதுரை